Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

(C/604)
Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 09 புதன்கிழமை (23.03.2011) | பக்கங்கள் 12 +IV | ஓசை – 174

# அமெரிக்க விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

## நேட்டோ படைகளுக்கு லிபியா பதிலடி



(வாஷிங்டன்)

**லிபியாமீது வான் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட அமெரிக்க யுத்த விமானம் ஒன்று லிபியப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது. லிபியாவில் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் படைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் அங்கு மோதல்களில் சிக்கியிருக்கும் பொது மக்களைப் பாது காக்கும் நோக்கம் கொண்டது என்று கூறியும் நேட்டோ படைகள் மேற்கொண்டுவரும் 'ஒப்பரேசன் ஓடிசி' நட வடிக்கையின்போதே அமெரிக்கப்படையின் மேற்படி யுத்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது.**

அமெரிக்க விமானப்படையில் மிகவும் அதிநவீன யுத்த விமானம் என்று கருதப்பட்ட எவ்.15 ரக போர் விமானமே இவ்வாறு சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது. அதேவேளை, லிபியாவில் மேற்குலக நாடு கள் முன்னெடுத்துவரும் இராணுவ தலையீடு குறித்த ரஷ்யாவின் விமர்சனத்திற்கு பதிலளிக்கும் முயற்சியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாமீது மேற்குலகின் தாக்குதலை எதிர்த்து கண்டனப் போராட்டம்

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு

(கொழும்பு)

லிபியாவுக்கு எதிரான படை நடவடிக்கையை ஆரம்பித்துள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தா னியா போன்ற மேற்கு நாடுகளைக் கண்டித்தும், லிபிய ஜனாதிபதி கேணல் கடாபிக்கு ஆதர வாகப் போராட்டங்களை நடத்துமாறு ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ள தாகத் தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கத் தலைவரும், மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் மூத்த ஆலோசகருமான ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோரை மையப்படுத்தி இப்போராட்டங்களை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், தொழிற்சங்கங்கப் போராட்டம் என்ற ரீதியிலேயே (11 ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாவில் பொதுமக்களின் பாதுகாப்பு; இலங்கை அரசு அதிக கரிசனை

(கொழும்பு)

லிபியாவிலுள்ள பொதுமக்களின் பாதுகாப்பு இலங்கையின் முக்கிய கரிசனையாகவுள்ளதென இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இவ்வாறான கரிசனையே 1973ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு இட்டுச்சென்றது. எனவே, இந்த தீர்மானத்துக்கமைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொதுமக் களையும் பொதுமக்கள் வாழும் இடங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் இணைக்கப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் சமாதானமான முறை யில் தீர்த்துவைக்கும் நடவடிக்கை (11 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மீனவர்கள் மூவர் வடக்கு கடலில் சிறைப்பிடிப்பு

### மீட்டுத்தருமாறு அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

(வல்வெட்டித்துறை)

வடமராட்சியைச் சேர்ந்த மூன்று கடற்தொழிலாளர் களை இந்திய மீனவர்கள் சிறைப்பிடித்துள்ளனர். நேற்று வடக்கு கடற்பரப்பில் வைத்து சிறைப்பிடிக் கப்பட்ட இம்மூவரையும் மீட்டெடுக்க உதவும்படி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிடம் அவசரக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. (11 ஆம் பக்கம் பார்க்க)

## பசுபிக் பிராந்திய மாநாடு இம்மாதம் இலங்கையில்

(கொழும்பு)

பசுபிக் பிராந்திய உறுப்பு நாடுகளின் சர்வதேச மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்த மாதம் 24ஆம் திகதி மற்றும் 26ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

அதில் 154 நாடுகள் இதில் கலந்து கொள்ளவுள்ள துடன், அதன் 400 இணை அமைப்புகளும் பங்கு பற்றவுள்ளன. இதற்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீள் குடியமர்ந்த வடமராட்சி கிழக்குப்பகு திகளில் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச்சங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள ஒரு. தொகுதி நிரந்தர வீட்டுத்திட்டத்திற்கான ஆரம்பக்கட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ளும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குழுவென்று நேற்று வடமராட்சி கிழக்குக்கு விஜயம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமாகாண மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்



### மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரட்ன

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் வடமாகாண மீனவர்களுக்கு உரிய தீர்வினைப் பெற் றுக்கொடுக்க வேண்டும் என்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அதிக கவனம் செலுத்தி வரு கின்றார் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ண அவர்கள் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்திய மற்றும் வடமாகாண கடற் றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்து ரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீன்வளத்தை மட்டு மல்ல கடல் வளத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புடன் முழு நீரியல் வளத்தையும் பாதுகாப்பது எமது கடமையாகும் என்பதுடன் - ஏனைய நாடுகளின் கடல் எல்லைகளுக்குள் அத்துமீறி மீன்பிடிப்பது ஒரு சட்டவிரோதமான நடவடிக்கையே.

கடந்த நாட்களில் இந்திய - இலங்கை கடற்றொழி லாளர் சங்க பிரதிநிதிகள் (11 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்கள் இலங்கையில் கால் பதிக்கின்றன

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களும் தமது கிளைகளைத் திறப்பதற்கு முன்வந்துள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஸ்ரீஜயந்த நவரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

கனடா, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த கல்வி நிறுவனங்களே இவ்வாறு முன்வந்துள்ளன.

இந்நிறுவனங்கள் அம்பாந்தோட்டை, புத்தளம், கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தமது கிளைகளைத் திறக்கவுள்ளன.

ஆசியாக் கண்டத்தின் கல்விக்கும் அறிவுக்குமான கேந்திர நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வது ஜனாதிபதியின் நோக்கமாகும்.

இவ் இலக்கை அடையும் வகையில் உள்ளூர் பல்கலைக் கழகங்களின் வழிமுறைகள் தரமுயர்த்தப்படவுள்ளன.

இதேவேளை, தனியார் பல்கலைக்கழகங்களை அமைபபது சம்பந்தமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் பின்னர் தனியார் பல்கலைக் கழகங்களும் தரமுயர்த்தப்படும். இவ் உள்ளூர் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கும் உயர்கல்வியைத் தொடர்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கவுள்ளது.

இதில் திறமையான உள்ளூர் மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்க இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஔிர மறுக்கும் வீதி விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் சில வீதிகளில் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் குமிழ்கள் ஒளிதர மறுப்பதினால் அப்பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளதுடன், இரவில் போக்குவரத்தில் ஈடுபடும் பொது மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை கலைமகள் வீதி, நொத்தாரிசு வீதி, ஆசீர்வாதப்பர் வீதி என்பனவற்றிலே இவ்வாறு மின்கம்பங்களில் பொருதப்பட்டுள்ள மின்குமிழ்கள் ஒளிர மறுத்து வருகின்றன.

எனவே இம்மின் குமிழ்களில் ஏற்பட்டுள்ள மின் கோளாறினை சரிசெய்து அவற்றை ஒளிரச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை அப்பகுதிப் பொதுமக்கள கேட்டுக்கொள்கின்றனர். (பா)

## மாணவர்களுக்கான மதிய உணவு தொடர்ந்தும் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழான பாடசாலைகளுக்கான மதிய உணவு விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

தற்சமயம் பங்குனி மாதத்திற்கான மதிய உணவு வழங்கலுக்கான உலர் உணவுப் பொருட்கள் பெறும் வழங்கல் கட்டளைகள் சம்பந்தப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ்.செயலக உலக உணவுத்திட்ட பகுதியினரால் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

ஏற்கனவே பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கல் பொருட்களின் கையிருப்புத் தீர்ந்தன் காரணமாக தாமதமடைந்திருந்தது. இருந்தும் அந்நிலைமை சரிசெய்யப்பட்டு தொடர்ந்தும் இதற்கான உலர் உணவுப் பொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது. (பா)

## வடமராட்சிக் கல்வி வலய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு-

**கரம்**

**15 வயது பெண்**

வட.மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்தி மகா வித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**15 வயது ஆண்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் யாழ்.ஹாட்லிக் கல்லூரி, யாழ்.புற்றளை மகா வித்தியாலயம்.

**19 வயது பெண்**

வட.மத்திய மகளிர் கல்லூரி, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**19 வயது ஆண்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம்.

**சதுரங்கம்**

**15 வயது பெண**

வட.இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட.மத்திய மகளிர் கல்லூரி.

**15 வயது ஆண்**

யாழ்.ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்.உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

**19 வயது பெண்**

வட.இந்து மகளிர் கல்லூரி, வட.மத்திய மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**19 வயது ஆண்**

யாழ்.ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி. (109)

## வினாவிடை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தரம் 9 மாணவர்களுக்காக ஆ.பிருந்தாபன் எழுதிய தமிழ் மொழியும் இலக்கியமும் பயிற்சி வினாவிடை நூல் வெளியீட்டு விழா இன்று மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாணப் பரீட்சைக்குரிய விடயங்களை முற்றுமுழுதாக உள்ளடக்கியதாக இந்நூல் அமையுமென நூலாசிரியர் தெரிவித்துள்ளார். (மி)


## யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி அறிவித்தல் - 2011

2011 ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான ஆதன வரியினை 2011.03.31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15 %
ஏனைய காணிகள். - 20 %

நிலுவை உட்பட 2011 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252: பிரிவு XII 252 (I) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் "மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்" என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,**
**முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C/623)


## தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் டெங்கு நுளம்பு ஒழிப்புச் சம்பந்தமான கூட்டமொன்று நேற்றுக் காலை 10 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி நிறைஞ்சனா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இன்று முதல் 29 ஆம் திகதி வரை டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரமாக அனுஷ்டித்து சகல இடங்களையும் துப்பரவு செய்ய முடிவு எடுத்துள்ளதுடன், இதற்காக மக்களின் ஒத்துழைப்பினையும் எதிர்பார்த்துள்ளனர்.

இக்கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் எஸ். வலேன்ரையன் கொடிகாமம் பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச சபை உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (மி)

## தொழில் நுட்ப சேவை விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு, கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், புள்ளிவிவரவியல், உயிரியல் விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் வெலிசறை, அனுராதபுரம், குண்டசாலையில் அமைந்துள்ள இலங்கை கால்நடைவளர்ப்புப் பாடசாலை ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு வருட டிப்ளோமாச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். (10)


## சிறு விளம்பரம்

**படிவங்கள் விற்பனையாகின்றன**

◈ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு.

◈ G.C.E. O/L மீளாய்வுப் படிவம்.

யாழ்.பூபாலசிங்கம் புத்தக சாலை மற்றும் குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் விண்ணப்பியுங்கள். C/513






**அண்மையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட நாவலடிக் கிராமத்தின் சமுர்த்தி செயலணிக் குழுவின் ஆரம்ப நிகழ்வு நல்லூர் பிரதேச ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் தலைமையில் நாவலடி உதயநிலா முன்பள்ளியில் நடைபெற்றது.**

**இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளையும், மக்களையும் படங்களில் காணலாம்.**

*(படம்: பார்த்தீபன்)*

ஏற்பது இகழ்ச்சி என்கிற பழமொழி ஏழைகளையோ, பொருள் இல்லாதவர்களையோ மாத்திரம் குறிப்பிட வந்த நீதியல்ல. உலக மனித சமுதாயத்திற்கே சொல்லப்பட்ட ஒரு நீதி. - ஸ்ரீ. ஜயேந்திரர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

# காலம் தாழ்த்தாதீர்கள்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையைக் கையளிப்பதில் காலதாமதம் காட்டி வருவது கவலை அளிக்கக்கூடிய செயலாகவுள்ளது.

இவ்விசாரணைக் குழுவின் ஆயுள்காலம் வரும் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைய உள்ள நிலையில், ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்க விருப்பத்தைத் தெரிவித்திருந்த முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் தற்போது மௌனம் கடைப்பிடித்து வருவதாக ஆணைக்குழுவினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த ஆணைக்குழுமீது எமக்கு நம்பிக்கை இல்லை என்றும், சாட்சியமளிக்கமாட்டோம் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட மேலும் இரு மனித உரிமைகள் அமைப்புகள் நிராகரித்திருந்ததுடன், அக்குழுவினர்மீது கடும் கண்டனங்களையும் வெளியிட்டிருந்தன.

கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் (தீவகம் உட்பட) ஆகிய இடங்களில் விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களைப் பதிவு செய்த இவர்கள், உரிய காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு வேண்டிய சகலவற்றையும் மேற்கொள்வோமென சாட்சியம் அளித்தவர்களுக்கு உறுதிமொழிகளும் வழங்கியிருந்தனர்.

ஆரம்பத்தில் சாட்சியமளிக்க எதிர்ப்புத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலிந்து, வலிந்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் இவ்வேளையில், ஆணைக்குழுமுன் தமது சாட்சியங்களை அளிக்கத் தயங்குவது ஏன் என்று தெரியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் சாட்சியமளிக்க விருப்பம் தெரிவித்திருந்தபோதும் இதுவரை சாட்சியமளிக்க முன்வரவில்லை.

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கு பான்-கீ-மூனினால் நியமிக்கப்பட்ட "நிபுணர்குழு"வை அரசு இலங்கைவர அனுமதிக்காத நிலையில், அவர்கள் பல்வேறு வடிவங்களில் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய அழுத்தங்களையெல்லாம் சமாளிக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. ஆணைக்குழுமுன் இதுவரை சாட்சியமளித்தவர்களின் நம்பிக்கைகள் வீண்போகாதவாறு அவர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு ஆணைக்குழு முன்வர வேண்டும்.

ஜனாதிபதியிடம் ஆணைக்குழு சமர்ப்பித்திருந்த இடைக்கால அறிக்கை தொடர்பிலாவது அரசு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

அமெரிக்க இராஜாங்க துணைச் செயலர் ரொபேர்ட் ஓ.பிளேக் தெரிவித்திருப்பதுபோல, போர்க் குற்றங்களை எவர் செய்திருந்தாலும், அவர்கள் பொறுப்புக் கூறியே தீர வேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஜனாதிபதி நியமித்திருந்த இவ்வாணைக் குழுவை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ள நிலையில், ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ள விடயங்களை அரசு காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுப்பதுடன், சர்வதேச அழுத்தங்களுக்கும், நம்பிக்கையீனத்துக்கும் ஆளாகாமல் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும்.

மேலும் இப்பிரச்சினை நீடிப்பின் இன்னும் பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்பதையும் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

-ஆசிரியர்-

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வாரங்களுக்குள் மீள்குடியேற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் எஞ்சியுள்ள சகல குடும்பங்களும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மீள் குடியேற்றப்படுவார்களென மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்த அவர், சொந்தக் காணியற்றோருக்குக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கேதீஸ்வரன் மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவடைந்துவிட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்றதாலேயே அங்கு மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது கண்ணிவெடி அகற்றப்பட்டுவிட்டமை தொடர்பான சான்றிதழ் கிடைத்துள்ளது.

தற்போது வவுனியா மெனிக்பாம் முகாமில் 51 குடும்பங்கள் மீள் குடியேற்றத்திற்காக உள்ளன. இவர்களில் 26 குடும்பங்களுக்குச் சொந்தக்காணி இல்லாத நிலை உள்ளதால் இவர்களுக்கு காணிகளை வாங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அவசர கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமாகாணத்திலுள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி நிதி ஆணைக்குழுவினால் நாளை வியாழக்கிழமை காலை நடத்தப்படவுள்ளது.

இதில் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (109)

# நிக்கொட் நிறுவனத்தின் மூலம் முல்லைத்தீவில் கட்டுமானப் பணிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மாகாண சபையூடாக நிக்கொட் திட்டத்தின் கீழ் பல கட்டுமானங்களை மேற்கொள்ளவுள்ள நிலையில், இதற்கான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் நெத்தலியாறு பொதுநோக்கு மண்டபம் இரண்டு மில்லியன் ரூபா செலவிலும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் செல்வபுரம் பொது நோக்கு மண்டபம் இரண்டரை மில்லியன் ரூபா செலவிலும், முல்லைத்தீவு நகரத்தில் பொது நூலகம் ஒன்பது மில்லியன் ரூபா செலவிலும், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் மிருக வைத்தியசாலைக் காரியாலயம் ஏழு மில்லியன் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அத்துடன், விசுவமடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏழு கிளைகள் 11 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேலைத் திட்டங்களுக்குரிய கேள்விப் பத்திரங்களைக் கோரியுள்ளார்.

# திடீர் மரணவிசாரணை அதிகாரி தெரிவுக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திடீர் மரணவிசாரணை அதிகாரிகளைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே நீதி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அதற்குச் சமூகமளிக்கத் தவறிய பின்வருவோர் அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டோரின் பெயர் விபரங்கள் பின்வருமாறு -

திருமதி ஏ.நிரஞ்சனாதேவி, ஏ.வீரசிங்கம், மு.சிவகுமார், திரு.ரி. சிவராசா, ஜெ.குணாளகாந்தன், வி.கோகுலன், எம்.உதயசிறி இவர்களில் அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் நீதி அமைச்சுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவி மாவட்டச் செயலர் ஜெ.பரந்தாமன் அறிவித்துள்ளார்.

# நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு கொழுத்தும் வெய்யிலில் காத்திருக்கும் மக்கள்



படம்: (69)

(கொக்குவில்)

நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் தினமும் தகிக்கும் வெய்யிலில் ஒரு மணி நேரத்திற்கு மேலாகக் காத்திருக்க நேர்வதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலை யாழ். போதனா வைத்தியசாலை வாசலில் நடை பெற்று வருகின்றது.

மணிக்கூட்டு வீதி மற்றும் மின்சார நிலைய வீதி வழியிலான உள் நுழையும் பகுதியில் இக்காட்சியைக் காண்போர் மனமுருகிச் செல்வர்.

பங்குனி மாதத்தில் பாதைவழி வருவோரைப் பார்த்திருப்போர் பாவிகள் என்பதற்கு இணங்க இக்காட்சி அவ்வீதிகளால் போவோர் வருவோரை வாட்டி வருகின்றது.

வைத்தியசாலை வீதி வழியில் இருக்கும் நிழல் சூழ்ந்த இடங்கள் இப்பகுதியில் இல்லாததால் சிறு பாலகர் முதற்கொண்டு வயோதிபர் வரை சகலதரப்பினரும் இதனால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையை மதியம் 12 மணிக்கு முன்பிருந்து 12.30 மணிக்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்படும்வரை காணக்கூடியதாக இருக்கிறது. (68)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

யுனிசெப் நிறுவனத்தால் இழந்த கல்வியை மீளளிப்பதற்கான செயலமர்வு ஒன்று இன்று முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை கபறணையிலுள்ள சிரமன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

# யுனிசெப் நிறுவனம் உபகரண உதவிகள்

(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்தின் பின் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள வன்னிப் பாடசாலைகளுக்கு யுனிசெப் நிறுவனத்தால் உள்ளக மற்றும் பெரு விளையாட்டுக்களுக்குரிய விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட இப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப்பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் மாணவர்கள் முதலாம் தவணைப் பரீட்சையை நிலத்திலிருந்தே எழுத வேண்டிய நிலை உள்ளதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இத்தளபாடப் பற்றாக்குறையினை உடன் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மாணவர்களின் பெற்றோர்கள் தொண்டர் அமைப்புகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (42)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் நெத்தலியாறு பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 2 பேர் கிளிநொச்சி போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இதில் கோடா மற்றும் 77 கசிப்புப் போத்தல்கள் என்பனவற்றை கைப்பற்றியதுடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குறித்த 2 பேரையும் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது விசாரணையை மேற்கொண்ட நீதிவான் எச்சரிக்கை செய்து இருவரையும் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இரத்தினபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரையும் அவரிடம் இருந்த 20 கசிப்புப் போத்தல்களையும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்டுகின்றது.

குறித்த நபரை தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது விசாரணையின் பின்னர் நீதிவான் 60 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தறபோது சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி, மரங்கள் கடத்தல், போதைப் பொருள் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் இதனைத் தடுக்கும் முகமாக போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் குழு ஒன்றை நியமித்து, அவர்கள் அப் பிரதேசங்களுக்குச் சென்று தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் - இதன் ஒரு கட்டமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் சார்ஜன் பி.எஸ். பிஸிரகுமார தெரிவித்தார்.

குறிப்பாக மதுபாவனை, கசிப்பு உற்பத்தியினால் குடும்பப் பிரச்சினைகள் அதிகம் இடம் பெறுவதாகவும் இதனைத் தடுக்கும் முகமாகவும் இந்த கண்காணிப்பு நடவடிக்கை தீவிரமாக இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (77)



யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப்போட்டி யாழ் - துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றபோது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் கலந்து கொண்ட பெற்றோர், மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# பாரம்பரிய இசைவடிவங்களின் நாட்டுப்புறக் கொண்டாட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய நாட்டுப்புற இசை வடிவங்களின் கொண்டாட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை யாழ்.மாநகர சபை மைதானத்தில் (சுப்பிரமணியம் பூங்காவிற்கு அருகில்) நடைபெறவுள்ளது.

இதில் பகல் நேர நிகழ்வுகள் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல 1 மணிவரையும், பிரதான மேடை நிகழ்வுகள் பிற்பகல் 4 மணி முதல் இரவு 10 மணி வரையும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் மங்னியார் குழு(இந்தியா), சிபிக்வா (தென்னாபிரிக்கா), என்.பி.டங்கோல் மற்றும் துர்க்கா பி.கே (நேபாளம்) சப்றின் அசோசியேசன் (பாலஸ்தீனம்) கலாநிதி மௌனகுருவும் குழுவினரும் (கிழக்குமாகாணம்) சமன் பணாபிற்றிய மற்றும் மாத்ரா (கொழும்பு) ரோஹன பத்தகே(ஹோஹன) தென்பாங்கு (முருங்கன்), தகட்ட சன்னிய (டெனிப்பிட்டிய) இசைநாடகம் பூதத்தம்பி (அல்வாய்), களி கம்பரட்டம்(அக்கரைப்பற்று), காமன்கூத்து (நோவூட்) கபீர் மஞ்சா(சிறப்பி அடியா), கப்பற்பாட்டு (நாகர்கோவில்), கொஹொம் பகங்காறிய (தெல்தெனியா), கரகம்(அம்பன்), கோலம் (மிரிஸா) உழவர் நடனம் (வவுனியா) டின்றோ (நோர்வே) பப்பிரவாகம் கூத்து (சுழிபுரம்), கோவலன்கூத்து(முல்லைத்தீவு), பறைமேளம் (மட்டக்களப்பு), றூகட (அம்பலாங்கொட), சப்பிரகமுவ பலி (சப்பிரகமுவ) சிந்துநடைக்கூத்து (நீர்வேலி), மலைநாட்டு நடனம் மற்றும் பாரம்பரிய நாட்டுப்புற பாடல்கள் (வறக்காப்பொல), வசந்தன் கூத்து (கட்டுவன்), வில்லுப்பாட்டு (அச்சுவேலி), முருகன் திருநடனம் (புலோப்பளை) ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு அனுமதி இலவசம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 50 லட்சம் ரூபா செலவில் புதிய இராஜ கோபுரம்

(யாழ்.நிருபர்)

அத்தியடி சிதம்பரநடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத் திற்கு சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் புதிய இராஜகோபுரம் அமைக்கப்படவுள்ளது.

இவ் இராஜகோபுரத்துக்கான அடிக்கல்லை ஆலய நிர்வாக சபையினரும் கோபுர திருப பணிசபையினரும் இணைந்து நாட்டினர்

இராய கோபுர திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் திருப்பணிச் சபையினருடன் தொடர்பு கொணடு தமது காணிக்கை உதவிகளை வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.(10)

## முதியோருக்கு சிற்றுண்டி வழங்கல்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தினர் தமது அங்கத்தவர்களுக்குத் தினமும் பகலில் பால்தேநீருடன் சிற்றுண்டி வகைகளும் வழங்கி வருவதாக நிலையத்தினர் தெரிவிக்கின்றனர். இதன் ஆரம்பநிகழ்வை அப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தர் பு.நிருபன தனது அன்பளிப்புடன் ஆரம்பித்து வைத்தார்

இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா, முதியோர் உரிமைகள் மேம்பாடட்டு உத்தியோகத்தர் எஸ்.ஸ்பேல்ஸமன் பாலகுமாரி ஆகியோரும் கலந்து கொண்டு அனபளிப்புகளை வழங்கினார்கள். (104)

# இளைஞர் பரிமாற்று முகாம்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய சாந்தி சேனா இயக்கத்தினால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கிடையிலான இளைஞர் பரிமாற்று முகாம் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை அச்சுவேலி அருள்நந்தி பாடசாலையில் பிற்பகல் 2.30 மணிமுதல் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாந்தி சேனா இயக்கத்தின் பணிப்பாளரும் சர்வோதய இயக்கதின் உபதலைவருமான ரவீந்திரா கண்டகே பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுளஎனர்.

கௌரவவிருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலாளர் எம்.பிரதீபன், களுத்துறை மாவட்ட சர்வோதய நிலைய இணைப்பாளர் கே.உபாலி டி சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## மாவட்டத்தில் முதலிடம்

(கிளிநொச்சி)

கிளி/இந்துக்கல்லூரி மாணவர்களின் காத்தவராயன் நாட்டுக்கூத்து, தமிழ்த்தினப் போட்டியின் மாவட்ட மட்டத்தின் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளது. (69)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்நிருபர்)

நயினாதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் கும்பாபிஷேக ஆரம்ப கிரியைகள் நடைபெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் வரை தினமும் வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், இசைகச்சேரி என்பன இடம்பெறும் (10)

## க.பொ.த சாதாரணதர பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரண தர பரீட்சையின் மேலும் சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள வருமாறு:

யாழ் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் ஏ.3சி.5எஸ், 3ஏ.பி.3சி.எஸ, ஏ.பி.சி.3எஸ்

யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரி 4ஏ.4பி.எஸ், 2ஏ.6பி மேலும் ஒருவர் ஆறு பாடங்களில் சித்தி.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உஷன் திருவருள்மிகு ஸ்ரீ கஜகேணி வல்லவாம்பிகை சமேத விநாயகப்பெருமான் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9.20 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நேற்று முதல் ஆரம்பமாகிய அடியார்களின் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று புதன்கிழமை பகல் 11 மணி வரை நடைபெறவுள்ளது. (60)



சென்.சாள்ஸ் பாடசாலையில் நடைபெற்ற நாணயத்தாள்கள் கண்காட்சியை அதிபர் எம்.ஞானப்பிரகாசம் திறந்து வைப்பதையும், மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம் (21)

# யாழ்.நகரில் வீதி ஒழுங்கைப் பேணுவதை தீவிரப்படுத்துவதில் பொலிஸார் மும்முரம்

(யாழ்.நிருபர்)

யாழ். நகர வீதிகளில் வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொலிஸார் வீதி ஒழுங்கு முறைகளைக் கடுமையாக அமுல்படுத்தி வருகின்றனர்.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் செலுத்துவோர், சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பவற்றைப் பரிசீலிக்கும் பொலிஸார், குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லாதவர்களிடம் தண்டப்பணம் அறவிடுவதிலும், பணம் கட்ட மறுப்பவர்களை நீதிமன்றத்தில் ஆஜராக்குவதிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

துவிச்சக்கர வண்டிகளில் வீதியில் சமாந்தரமாகப் பயணிப்போரும் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொள்கின்றனர்.

யாழ். நகர வீதிகளில் ஒருவழிப் பாதையால் மட்டுமே வாகனங்கள் செலுத்தவேண்டும். இவ்வொழுங்கை மீறி துவிச்சக்கர வண்டிகளில் நகருக்குள் நுழைந்தோர் மீண்டும் வந்த வழியே துவிச்சக்கர வண்டியைத் தோளில் தூக்கிச் சுமந்தவாறு செல்லும்படி பணிக்கப்பட்டனர்.

மாணவர்கள் வீதி ஒழுங்குகளை மீறும்போது எச்சரிக்கப்பட்டும் மற்றும் சைக்கிள் சில்லுகளின் காற்றுத் திறந்து விடப்பட்டும், அறிவுறுத்தப்படுகின்றனர்.

கடந்த கால்நூற்றாண்டுகளுக்குப் பின்னர் போக்குவரத்து விதிகள் அமுல்படுத்தப்படுவதால், சுதந்திரமாக வாகனம் செலுத்திப் பழக்கப்பட்ட மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (10)

# புனரமைப்புச் செய்யப்பட்ட பேக்கரி வீதி திறந்துவைப்பு



இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட ஜே-74 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பேக்கரி வீதியினை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் துரைராசா இளங்கோ (றீகன்), யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், மற்றும் சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (69)

# விஞ்ஞானபாட ஆசிரியர் இன்மையால் சிரமத்தை எதிர்நோக்கும் மாணவர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின தரம் 6, 7, 8, 9, 10 ஆகிய வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாட ஆசிரியர் நியமிக்கப்படவில்லையென பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

முன்னர் விஞ்ஞானபாட கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த ஆசிரியரும் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டதாகவும் விஞ்ஞான பாடத்திற்கு ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

எனவே, இதுவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

# பேராசிரியர் விசாகரூபனுக்கு 2009 ஆம் ஆண்டு சம்பந்தர் விருது



2009 ஆம் ஆண்டுக்கான சம்பந்தர் விருதைப் பேராசிரியர் வி.விசாகரூபன் எழுதிய ஈழத்தின் தமிழ் நாவல்கள் நாட்டார் பண்பாட்டுக்கூறுகள் 'பயில்நிலையும் பயன்பாடும்' என்னும் நூல் பெற்றுக்கொண்டது.

இந்த நூலுக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

# ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி அண்மையில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாட சாலை மொத்தமாக 343 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் 300 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை மற்றும் மாங்குளம் மகா வித்தியாலயம் அகியன சமபுள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதில் பெருவிளையாட்டுப் போட்டிகளில் கரப்பந்து மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் இவ்வார இறுதியில் இடம்பெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (42)

## ஆதினியின் இன்றைய பலன்

(23.03.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 09

இராகுகாலம் 12.16–1.46, சுபநேரம் 4.46 –6.16

சதுர்த்தி பி.ப 3.40,

விசாகம் பி.இ.3.29,

சித்தாமிர்தம் சங்கடஹர சதுர்த்தி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– மகிழ்ச்சி மிகுதி, பிறரால் மதிக்கப்படல், உற்சாகம்.

ரிஷபம்:– நற்செயல் செய்தல், பெரியோர் பாராட்டு, தன்னம்பிக்கை.

மிதுனம் :– தாழ்ந்த நிலை, அவமதிப்பு, மனச் சோர்வு.

கடகம்:– செய்தியால் வரவு, பெற்றோர் உதவி, காரிய சித்தி.

சிம்மம்:– பகை நீங்கல், தெய்வ தரிசனம், உதவி பெறல்.

கன்னி :– கௌரவம் உயர்வு, செய்தியால் நன்மை, தடை நீக்கம்.

துலாம் :– காரியத்தடை, தர்க்கித்தல், அவமானம்.

விருச்சிகம்:– மருத்துவச் செலவு, பொருள் இழப்பு, விரோதம்.

தனுசு:– தேகநலன் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, பெரியோர் உதவி.

மகரம்:– ஆன்மீக விருப்பு, தன்னடக்கம், பெரியோர் உதவி.

கும்பம் :– பாராட்டப்படல், நிம்மதி, குடும்பத்தில் அமைதி.

மீனம்:– நற்செய்தி, பகைவிலகல், இனிய சந்திப்பு.

# இலவச மூக்குக்கண்ணாடி விநியோகம்

(யாழ். நிருபர்)

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முறபகல் 9.30 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் 39 மாணவர்களும், வலந்தலை அ.மி.த.க பாடசாலையில் 2 மாணவர்களும், யாழ்ற்ரன் கல்லூரியில் 9 மாணவர்களும், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் 2 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் இந்நிகழ்வில், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கலந்துகொள்வாரென சிறுவர் அபிவிருத்தி நிலைய ஒழுங்கமைப்புச் செயலாளர் பாலதயானந்தன் அறிவித்துள்ளார். (10)

# இலவச தையல் பயிற்சி வகுப்புகள்

(யாழ். நிருபர்)

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து வெளியேறிய மாணவர்களுக்காக வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் பல்வேறு தொழிற்பயிற்சிக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக தையற் கலையில் ஆர்வமுள்ள யுவதிகளின் தொழிற்திறனை விருததி செய்யும் நோக்குடன் இலவசமாக தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தையல் பயிற்சி வகுப்புகள் இவ்வருடம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள மயிலிட்டி றோ.க.த.க பாடசாலையில் நடததுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஆறுமாதகால இல்வச தையல் பயிறசி வகுப்புகளில் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்ட இளம் பெண்களும், வீட்டுப் பெண்களும் பாடசாலை நேரத்தில் வந்து அதிபரிடம் பதிவுகளை மேற்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.(10)

# இடமாற்றம்

வடக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றிய சிவபாலசுந்தரம் தவக்குமாரி இம்மாதம் தொடக்கம் வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (08)

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மாதிரி வினாத்தாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். கல்வித் திணைக்களம் நடத்தும் கணக்கீடும் வணிகக்கல்வியும் எனும் தலைப்பில் 2011 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரமாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் கருத்தரங்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் நல்லூர் கோட்ட மாணவர்களும், கோப்பாய்க் கோட்ட மாணவர்களும் கலந்துகொள்ள முடியும்.

காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு கோப்பாய் ஆசிரிய ஆலோசகர் எம்.சகுந்தலாதேவி அவர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (பா)

# மின்னிணைப்பு வேலைகள் பூர்த்தியாகியும் மின்சார விநியோகம் இதுவரையில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரம் கிராமத்திற்கான மின்னிணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ள போதும் இதுவரையில் மின் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லையென அப்பகுதிப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கணேசபுரம் கிராமத்தின் பிரதான வீதி உட்பட்ட உள் வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவில்லையெனவும், வீதிகள் மிகவும் சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகவும் இதனால் போக்குவரத்தினை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இது விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

# மீனவர் எல்லை மீறல் தொடர்பாக இந்திய அரசுடன் மட்டுமே பேச்சு

## அமைச்சர் ராஜித சேனாரத்ன



(கொழும்பு)

மீனவர்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் மட்டுமே பேச்சு நடத்தப்படும் என்று மீன் பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கடல் வலயம் முக்கியமானது என்பதுடன் எவராலும் கடல் எல்லையை மீறவும் முடியாது. கடல் எல்லையை மீறுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். அமைச்சர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மீனவர்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மீனவர் சங்கங்களுடனும் இந்திய மீனவர் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவேன்.

அந்தப் பேச்சுவார்த்தையில் இருபிரிவினரும் பல்வேறு கருத்துக்களையும் யோசனைகளையும் முன்வைப்பார்கள். அதனடிப்படையில் மீனவர்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் இந்திய அரசுடன் மட்டுமே பேச்சு நடத்துவேன்.

கடல் வலயம் முக்கியமானது. எக்காரணம் கொண்டும் கடல் எல்லையை மீறமுடியாது. கடல் எல்லையை மீறுவதற்கு எவருக்கும் உரிமையில்லை. வடக்கு மீனவர்கள் கடற்பரப்பில் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் இலங்கைக்கான இந்திய தூதுவருடனும் இந்தியாவிற்கான இலங்கை தூதுவருடனும் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

இந்திய கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்களும், இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களும் நுழையமுடியாது. இந்த விடயம் தொடர்பில் இந்திய அரசாங்கத்தை தவிர வேறு எந்தத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது. கடல் எல்லையை மீறிச் செல்கின்ற வேளையில் சமிக்ஞை ஒலி எழுப்பக்கூடிய கருவிகளை விரைவில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

# ஜப்பான் மக்களுக்கு வழங்கவென 3மில்லியன் தேயிலைப் பொதி கையளிப்பு



(கொழும்பு)

ஜப்பானில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென 60 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான 03 மில்லியன் தேயிலைப் பொதிகளை இலங்கைத் தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் சங்கத்தின் தலைவர் ஜயந்த கேரகல இப்பொதிகளை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க- ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க- ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னகொட இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவர் சுசந்த ரத்நாயக்க மற்றும் தேயிலை ஏற்றுமதிச் சங்கத்தின் பதில் தலைவர் ரோஹன் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இலங்கையர் 770 பேர் ஜப்பானிலிருந்து திரும்பினர்

(கொழும்பு)



ஜப்பானிலிருந்து 770 பேர் நாடு திரும்பியதுடன் மேலும் பலர் நாடு திரும்ப ஆயத்தமாக இருப்பதாக ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவிக்கின்றது.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளதுடன் அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்காக விசேட விமான சேவைகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்தின பிரதித் தூதுவர் அசேல வீரக்கோன் தெரிவித்தார்.

ஜப்பானில் இருந்து மேலும் 500 இலங்கையர்கள் கடந்த சனிக்கிழமை நாடு திரும்பினர். இதேவேளை முன்னரும் 270 பேர் விசேட விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளனர்.

# இந்தியா அமைத்த அணு உலைகளால் இலங்கைக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்

(கொழும்பு)



இலங்கை அணு சக்தி யுகத்திற்கு செல்கின்றதோ இல்லையோ, இந்தியாவின் அணு உலைகளினால் எப்போதுமே நாட்டிற்கு அச்சுறுத்தல் இருந்து வருகின்றதென மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். இந்தியா தனது தென் முனையில் அணு உலைகளை அமைத்துள்ளது.

இந்நிலையில் விபத்துகள் பொதுவானவை எனவும் அதனால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை அவசியம் எனவும் ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அமைச்சர் ரணவக்க கூறியுள்ளார்.

8.5 மக்னிடியூட் அலகு பூதியதிர்வினை எதிர்த்து நிற்கக கூடிய அணு உலைகளே நிர்மாணிக்கப்பட்டிருப்பதாகவும் ஆபத்துகள் ஏற்படுவதற்கு முன்னர் அதனை முன்கூட்டியே தடுத்துவிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்திருக்கிறார். தோறியம் அதிகளவில் கிடைப்பதால் அணு சக்தி பிராந்தியத்திற்கு குறிப்பாக இலங்கை மற்றும் இந்தியாவிற்கு அது சிறந்தது என அமைச்சர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் அணு சக்தி உலையை நிறுவுவதற்கு பூர்வாங்க ஆய்வுகள் மேற்கெள்ளப்பட்டிருந்தாலும் அதற்கு 15 வருடங்கள் செல்லுமென அவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, புகுசிமாவில் ஏற்பட்டிருக்கும் கதிர்வீச்சுக் கசிவுகள் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என அணு சக்தி அதிகார சபை தெரிவித்திருக்கிறது. இது தொடர்பான எச்சரிக்கையை இலங்கைக்கு சர்வதேச அணு சக்தி முகவரமைப்பு விடுத்திருக்கவில்லையென இலங்கையின் அணு சக்தி அதிகார சபைத் தலைவர் டாக்டர் விமலதர்ம அபேயவிக்கிரம கூறியுள்ளார். இந்த விடயம் குறித்து சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத்துடன் தாங்கள் தொடர்பாடல்களை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முறையான பயிற்சியை மேற்கொள்ளாத மருத்துவர்களை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

வைத்தியத்துறைக்குத் தேவையான தகுதியின்றி, அத்துறைசார் பயிற்சி நெறிகளை மேற்கொண்ட மருத்துவர்கள்,டெங்கு நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதனால் பெரும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்தது.

இவ்வாறான மருத்துவர்களிடம் சிகிச்சை பெறும் நோயாளிகள் நோய் முற்றிய நிலையில் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வருகின்றனர். இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பெரும் இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையர் சுமார் ஏழாயிரம் வரையானோர் இவ்வாறான சட்டவிரோத வைத்தியத் துறையில் ஈடு பட்டு வருகின்றனர். எனினும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் எனவே இவ்வாறான போலி வைத்தியர்களால் நடாத்தப்படும் மருத்துவ நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் போலிவைத்தியர்களாக செயற்படுவோரை மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களின் உதவியோடு கைது செய்வதுடன்.அவர்கள் நடாத்தும் மருத்துவ நிலையங்களையும் பரிசோதனை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


இந்தப் போலி மருத்துவர்கள் தம்மை எம்.பி.பி.எஸ் மற்றும் மேற்கு நாட்டு மருத்துவத் துறையில் விற்பன்னர்கள் எனவும் நினைத்துச் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# லிபியா மீதான தாக்குதலை கண்டித்து இலங்கையில் போராட்டம் நடத்தமுடிவு



(கொழும்பு)

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் ஒன்றிணைந்து லிபியா மீது மேற்கொள்ளும் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு எதிராக அனைத்து மக்களும் குரல் எழுப்ப வேண்டுமென தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர். லிபியா மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டுமெனத் தெரிவித்த தொழிற் சங்கத் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராகத் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாகவும் தெரிவித்தனர். லிபியா மீது அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகள் கூட்டாகத் தாக்குதல் நடத்துவதைக் கண்டிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று நேற்று முன்தினம் கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள மேல் மாகாண ஆளுநரின் பணிமனையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் சிரேஷ்ட தொழிற் சங்கத் தலைவரும் மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா, பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ஏ. எச்.எம்.அஸ்வர் உட்பட தொழிற் சங்கப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



நிதிமற்றும் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள்,பாதுகாப்புச் செயலாளர்,முப்படைகளின் தளபதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## இந்தியா செல்லவுள்ள பாகிஸ்தான் ரசிகர்கள்



(புதுடில்லி)


உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியாவில் நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டங்கள், மற்றும் அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் ரசிகர்கள் இந்தியா செல்லவுள்ளனர்.

இந்த ஆட்டங்களை நேரில் காண பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்கள் 5 ஆயிரம் பேர் இந்தியா வருவதற்கு விசா வழங்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட்டைக் காண்பித்த ரசிகர்களுக்கு தேவையான சோதனைகளுக்குப் பின்னர் 15 நாள் விசா அளிக்கப்பட்டிருப்பதாக இந்திய அரச அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி இதுவரை இந்தியாவில் எந்தவொரு ஆட்டத்திலும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காலிறுதி ஆட்டம் இன்று ஆரம்பம்





(டாக்கா)

உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் முதலாவது காலிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான்- மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இன்று மோதுகின்றன.

இப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பங்களாதேஷ் டாக்காவில் பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் லீக் போட்டியில் ஆடி உள்ளதைப் பார்க்கும்போது பாகிஸ்தான் அணியே வலுவான அணியாகத் தெரிகிறது. 'ஏ' பிரிவில் இடம்பெற்று இருந்த பாகிஸ்தான் அணி அந்தப் பிரிவில் 10 புள்ளிகளை வென்று முதலிடத்தில் இருந்தது. இந்த அணி 6 போட்டிகளில் ஆடி 5 போட்டிகளில் வென்று இருந்தது. 1 போட்டியில் மட்டுமே தோல்வியைச் சந்தித்து இருந்தது.

ஆனால் 'பி' பிரிவில் இடம் பெற்று இருந்த மேற்கிந்தியத்தீவுகள் அந்தப் பிரிவில் 4ஆவது இடத்தில் இருந்தது. 6 போட்டிகளில் ஆடிய இந்த அணி 3 போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. 3 போட்டிகளில் தோல்வியைச் சந்தித்தது. தட்டுத் தடுமாறித்தான் காலிறுதிப் போட்டிக்கே வந்தது. எனவே இரு அணிகளையும் ஒப்பிடும்போது பாகிஸ்தான் அணியே வலுவாக உள்ளது. எனவே பாகிஸ்தான் இந்தப் போட்டியில் வென்று அரை இறுதிப்போட்டிக்குச் செல்ல பிரகாசமான வாய்ப்பு உள்ளது. ஆனால் பாகிஸ்தான் அணியை எப்படியாவது வீழ்த்தி அரை இறுதிக்கு சென்று விடவேண்டும் என்று மேற்கிந்தியத்தீவுகள் பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளது. இதற்காகக் கடும் பயிற்சியிலும் ஈடுபட்டு உள்ளது. அதற்கு பலன் கிடைக்குமா? என்பதுதான் கேள்வியாகவுள்ளது.

| இன்றைய ஆட்டம் | நாளைய ஆட்டம் |
| --- | --- |
| மேற்கிந்தியத்தீவுகள் எதிர் பாகிஸ்தான் | அவுஸ்ரேலியா எதிர் இந்தியா |
| மைதானம் :டாக்கா பகலிரவு ஆட்டம் | மைதானம் : அகமதாபாத் பகலிரவு ஆட்டம் |

ICC Cricket World Cup 2011

## முதலிடத்தைப் பிடித்த பல்கலைக்கழக அணி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சிறந்த கழக அணியாக யாழ். பல்கைலக்கழக அணி முன்னிலையில் உள்ளது.

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010ஆம் ஆண்டு முதல் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வினை நடாத்தி வருகின்றது.

2011ஆம் ஆண்டிற்கான இந்நிகழ்வில் கடந்த 18ஆம் திகதி வரை நடைபெற்ற 21 போட்டிகளின் முடிவுகளின் படி யாழ். பல்கலைக்கழக அணி 20 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், கே.சி.சி.சி அணி 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்திலும், ஸ்கந்தாஸ்ரார் அணி 10 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், ஜொலிஸ்ரார் அணி 8 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்திலும், மானிப்பாய் பரீஸ், அணி சென்றலைட்ஸ் அணி, யூனியன்ஸ் அணி, சிறிகாமாட்சி அணி, கிறாஸ் கொப்பர்ஸ் அணி தலா ஐந்து புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

இந்நிகழ்வில் கூடிய புள்ளிகளைப் பெறும் அணிக்கு யாழ். நகரில் முதல் முதலில் துடுப்பாட்டத்தை அறிமுகப் படுத்திய ஜோர்ஜ் வெப்ஸ்ரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும், ரொக்கப் பணமாக ரூபா 10,000மும் வழங்கப்படும் என சென்றல் கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக அணி ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணிக்கெதிரான போட்டி துடுப்பாட்ட வரிசையில் மாற்றம்


(அகமதாபாத்)

இந்திய அணிக்கெதிரான காலிறுதிப் போட்டியில் அணியின் துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்று அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

இது குறித்து ரிக்கி பொண்டிங் மேலும் கூறியதாவது:-

மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தும் போது அதனைச் சரி செய்வது எப்படி என்பது குறித்து விவாதங்கள் நடக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. இதனால் அணியில் நிறைய மாற்றங்கள் இருக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இருப்பினும் ஆட்டத்தில் நடந்த தவறுகள என்ன? அதனைக் களைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

துடுப்பாட்ட வீரர்களின் மோசமான துடுப்பாட்டத்துக்கு காரணம் சொல்ல முடியாது. இது வரை நடந்த போட்டிகளில்



நாணயச் சுழற்சி வென்றது முதல் ஆடுகளம் உள்ளிட்ட எல்லா அம்சங்களும் எங்களுக்குச் சாதகமாக இருந்தது. நல்ல ஓட்ட எண்ணிக்கையைக் குவிக்க எங்களுக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் அதனை நாங்கள் செய்யவில்லை. அத்துடன் பாகிஸ்தானுடனான ஆட்டத்தை நாங்கள் கைநழுவ விட்டு விட்டோம் எனத் தெரிவித்தார்.

## மக்களைக் கவரும் வகையில் ஐம்பது ஓவர் போட்டி உள்ளது

50 ஓவர் போட்டி மக்களைக் கவரும் போட்டியாக விளங்குகிறது என்பதை உலகக் கிண்ணப் போட்டி நிரூபிக்கிறது என சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் சரத்பவார் தெரிவித்தார்.

உலகக் கிண்ணப் போட்டித் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடந்து வருகிறது. இந்தப் போட்டியில் அனைத்து லீக் ஆட்டங்களும் முடிந்துவிட்டன. இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் சரத் பவார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

உலகக் கிண்ணப் போட்டி பாராட்டும் விதமாகவுள்ளது. போட்டித் தரம் மிகவும் சிறப்பாக இருப்பதைக் காண முடிகிறது. சில அபாரமான ஆட்டங்களால் 50 ஓவர் கிரிக்கெட் போட்டி திருவிழா போல் அமைந்தன. பெங்களூரில் நடந்த இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில்



சமநிலையில் முடிந்த ஆட்டம் மறக்க முடியாத வகையில் இருந்தது. 50 ஓவர் போட்டி மக்களைக் கவரும் போட்டியாக விளங்குகிறது என்பதை உலகக் கிண்ணப் போட்டி நிரூபிக்கிறது. மைதானத்தில் ரசிகர்கள கூட்டம் அதிகமாக இருக்கிறது. அத்துடன் தொலைக்காட்சியில் ஆட்டத்தை கோடிக் கணக்கானோர் கண்டு ரசிக்கின்றனர் என்றுள்ளது.



மர்ஹூம் அலியார் ரமீஸ் ஞாபகார்த்தமாக யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்கொண்ட சென் மேரிஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. சென் மேரிஸ் அணித் தலைவர் வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம். (19)

## வலய மட்டசுற்று இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்துக்குபட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான வலய மட்ட கால்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டி கடந்த வருடம் மூன்றாம் தவணையில் நடைபெற இருந்த வேளையில் பருவ மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, இவ் வருட ஆரம்பத்தில் இடம்பெறுவதற்கான போட்டி நிரல் தயாரிக்கப்பட்டு பாடசாலைகளின் மென்வன்மைப் போட்டி, கோட்ட மட்டப் போட்டி என்பவற்றால் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன. (42)

## விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

ICC Cricket World Cup 2011

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பிபெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.

1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?

பெயர்: ..................................

முகவரி : ..................................

போ.இல : ..................................

விடைகள் : 01) ..................................

02) ..................................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# அரபுலகில் மக்களின் கிளர்ச்சியை அடுத்து ஜிமெயில் சேவையை முடக்கியது சீன அரசு




(பீஜிங்)

உலகில் அதிகளவில் இணையதள சேவையினைப் பயன்படுத்தும் நாடான சீனா, கூகுள் தேடுதல் வலைத்தளத்திலுள்ள ஜிமெயில் சேவையினை முடககி வைத்துள்ளதாகப் பகிரங்க புகார் தெரிவித்துள்ளது.

சீனாவில் தான் கூகுள் தேடுதல் வலைத்தளத்தினை 470 மில்லியன் மக்கள் பயன்படுத்துகின்றனர். இதில் ஜிமெயில் சேவையினை அதிகம் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

சமீபத்தில் துனிசியா, எகிப்து போன்று நாடுகளில் சமூக வலைத்தளங்களினால் தான் ஆட்சி மாற்றம், பொதுமக்கள் கிளர்ச்சி ஏற்பட்டது. இதன் எதிரொலியாகச் சீனாவில் தற்போது வெடித்துள்ளது. இதற்குக் காரணம் கூகுளின் ஜிமெயில் சேவை என கூறப்படுகிறது.

ஏற்கனவே சீனா தனது சொந்த மொழியிலுள்ள இணையத் தளங்களை முடக்கி வைத்துள்ளது.

அதேபோன்று உலகப் புகழ் பெற்ற கூகுள் இணைய தளத்தின் ஜிமெயில் சேவையினை முடக்கி வைத்துள்ளதாக கூகுள் குற்றம் சாட்டியுள்ளது.

அதுமட்டுமின்றி வி.பி.என் எனப்படும் தனி நபர் இணைப்புகளையும் துண்டித்துள்ளது சீனா. இதனால் சீனாவில் ஜிமெயில் வாயிலாக வர்த்தக பரிவர்த்தனை .சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.




# ஜப்பானிய கதிர்வீச்சுத் தாக்கம் கனடாவிற்கும் பரவியுள்ளதாம்



பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரைப் பகுதியில் மிகச் சிறிய அளவு கதிர்வீச்சு உள்ளது என கனடா சுகாதாரத் துறை கண்டறிந்துள்ளது.

ஜப்பான் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட கதிர்வீச்சு பரவல் காரணமாக இந்தக் கதிர்வீச்சு பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஏற்பட்டுள்ளது. இது அபாயகரமான அளவில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜப்பானில் இந்த மார்ச் 11 ஆம் திகதியன்று 9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் புகுஷிமா அணு மின்நிலையத்தில் கதிர்வீச்சு ஏற்பட்டது. இந்தக் கதிர்வீச்சு பரவல் ஜப்பானையடுத்துள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவின் கடற்கரைப் பகுதிகளிலும் சிறிய அளவு அதிகரித்துள்ளது.

இது குறித்துக் கனடா சுகாதாரத்துறை செய்தித் தொடர்பாளர் காரி ஹோலப் கூறுகையில், கதிர்வீச்சு நிலை எதிர்பார்த்தளவிலேயே உள்ளது. கனடாவில் மழை பொழியும்போது ஏற்படும் கதிர்வீச்சு அளவே தற்போதும் ஏற்பட்டுள்ளது. இந்தக் கதிர்வீச்சால் கனடியர்கள் உடலுக்கு அபாயமில்லை என்றார்.

கதிர்வீச்சைக் கண்காணிக்கக் கடந்த வாரம் இறுதியில் கனடா சுகாதாரத்துறை, மேற்கு கடலோரப்பகுதிகளில் மேலும் கடலோர கண்காணிப்பு மையங்களை நிறுவியது. ஜப்பான் கதிர்வீச்சு தாக்கம் பெருமளவு இல்லாத போது பிரிட்டிஷ் கொலம்பியாவில் சில மக்கள் அச்சத்திலேயே உள்ளனர்.

கதிர்வீச்சு பாதிக்காமல் இருக்க பிரிட்டிஷ் கொலம்பியா மக்கள் மூக்கை மூடிக்கொள்ளும் துணியை அதிகம் உபயோகப்படுத்துகின்றனர்.

# சிரியாவிலும் வெடித்தது போராட்டம்



(தேரா)

கடந்த பெப்ரவரி மாதம் துனிசியாவிலும் அதைத் தொடர்ந்து எகிப்திலும் ஆட்சியாளர்களுக்கு எதிராக கலவரம் மூண்டது. அவை முடிவுக்கு வந்த நிலையில் லிபியாவில் அதிபர் கடாபிக்கு எதிராகக் கலவரம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, அதன் பக்கத்து நாடான சிரியாவிலும் போராட்டம் வெடித்துள்ளது.

அங்கு பாத் கட்சியைச் சேர்ந்த பஷார் அல்-ஆசாத் கடந்த 50 ஆண்டுகளாக அதிபராகப் பதவி வகித்து வருகிறார்.

மேலும், அங்கு 48 ஆண்டுகளாக அவரகாலச் சட்டம் அமுலிலிருந்து வருகிறது. அதனால் அதிபர் ஆசாத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் பதவி விலக வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.


இந்தப் போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. அங்குள்ள தேரா நகர வீதிகளில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு அவர்களை மக்கள் தாக்கினர். அச்சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து கலவரம் வலுவடைந்தது. நேற்று 3 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தேரா நகருக்கு வரும் வீதிகள் மூடப்பட்டன. பாதுகாப்புப் பணியில் பொலிஸாருடன் ராணுவமும் ஈடுபடுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து தேரா நகரின் மீது ராணுவ ஹெலிகாப்டர்கள் பறந்தபடி போராட்டக்காரர்களின் நடவடிக்கையை கண்காணித்தது. இதற்கிடையே, போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். அதில் ஒருவர் பலியானார். பலர் காயம் அடைந்தனர். அதனால் ஆத்திரம் அடைந்த அவர்கள் பாத் கட்சி அலுவலகத்துக்கு தீ வைத்தனர்.

மேலும் அதிபர் ஆசாத்தின் உறவினர்களுக்குச் சொந்தமான 2 டெலிபோன் நிறுவனங்களுக்கும் தீ வைத்தனர். போராட்டம் வலுவடைந்துள்ள நிலையில் தேரா நகரில் இயங்கும் இண்டர்நெட் உள்ளிட்ட தகவல் தொடர்பு நிலையங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் நிறுத்தப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அவர்கள் வீடுகளுக்குள் முடங்கி கிடக்கின்றனர். இதற்கிடையே போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவர சிரியா அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

# சுனாமியால் அழிந்த ஜப்பான் மீண்டெழ ஐந்து வருடம் செல்லுமெனத் தெரிவிப்பு



சுனாமியால் சின்னா பின்னமாகிப்போன ஜப்பான் மீண்டும் புத்துயிர்பெற 5 ஆண்டுகள் ஆகும் என உலகவங்கி தெரிவித்துள்ளது.

ஜப்பானில் சென்டாய், புகுஷிமா ஆகிய மாகாணங்களில் கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தினால் சுனாமி தாக்கியது. 4 இற்கும் மேற்பட்ட அணுஉலைகள் வெடித்துச் சிதறின. இந்தக் கோரச் சம்பவத்தால் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் சுனாமி பாதித்த பகுதிகளை ஆய்வு செய்த உலக வங்கி, ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியில் 0.5 அளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏராளமான கட்டடங்கள் மற்றும் சாலைகள், அணு உலைகள் சேதமடைந்துள்ளதால் இவற்றின் மதிப்பு 235 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இவற்றினை சீரமைத்து உள் கட்டமைப்புகளை மேற்கொள்ள 5 ஆண்டுகள் ஆகும். ஏற்கனவே 33 மில்லியன் டொலர் அளவுக்கு தனியார் அமைப்பு வாயிலாகவும், ஜப்பானின் பட்ஜெட்டில் 12 மில்லியன் டொலர் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து காப்பீடு (இன்சூரன்ஸ்) செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாதிப்பால் மின்சாதன மற்றம் மின்னணு பொருட்கள் உற்பத்தியில் தான் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஆசிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவற்றை மீண்டும் செயற்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க ஜப்பான் அரசு தீவிரம் காட்டிவருகிறது.

முன்னதாக உலகப்போரின் போது ஏற்பட்ட பாதிப்பைவிட இநத சுனாமி தாக்கியுள்ளதாக பிரதமர் நெட்டோ கான் குறிப்பிட்டிருந்தார். அந்தளவுக்கு பாதிப்பு கடுமையாக உள்ளதால் இவற்றைப் புனரமைக்க 5 ஆண்டுகள் வரை கால அவகாசம் பிடிக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

# லிபிய தலைமைப் பதவியிலிருந்து கடாபி சில நாட்களில் நீக்கப்படுவார்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு

(திரிபோலி)

லிபியத் தலைவர் கேணல் கடாபி அந்தப் பதவியிலிருந்து சில நாட்களில் அகற்றப்படுவாரெனவும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவே தற்போது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது சிலிநாட்டுக்கான பயணத்தின்போது தெரிவித்தார்.

அத்துடன், லிபியாவில் நடத்தப்படும் தாக்குதல்கள் வாரங்களில் அல்ல சில நாட்களில் முடிக்கப்படும். எமது இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையூடாகச் சர்வதேச ஆதரவு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடத்திவரும் ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதலில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக லிபிய அரசாங்கம் தெரிவித்தது.

இதேவேளை, லிபிய அரசாங்கம் போர் நிறுத்தத்தை அறிவித்த போதிலும் லிபிய இராணுவத்திற்கும், கிளர்ச்சிப் படைகளுக்குமிடையேயான மோதல் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, லிபியாவில் தாக்குதல் நடாத்திய அமெரிக்கப் போர் விமானமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், விமான ஓட்டியைக் கிளர்ச்சியாளர்கள் காப்பாற்றியுள்ளதாகவும் டெய்லி ரெலிகிராப் நாளிதழ் தெரிவித்தது.

# ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் மீது எகிப்திய தலைநகரில் கல் வீச்சு



(கெய்ரோ)

ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கீ மூன் மீது எகிப்திய தலைநகர் கெய்ரோவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கெய்ரோவில் அரபு லீக் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் பான்கீ மூன் பங்குபற்றினார்.

அங்கிருந்து தஹ்ரிர் சதுக்கத்தை நோக்கிச் செல்ல அவர் வெளியே வந்தபோது, லிபியாவில் ஐ.நா. ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் கூட்டுப் படைகளின் தாக்குதலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களால் பான்கீ மூன் மீது கற்கள் வீசப்பட்டன.

பான் கீ மூனுக்கு எதிரான கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர்.

எனினும், இதனால் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், அவர் மீண்டும் அரபு லீக் தலைமையகக் கட்டடத்திற்கு உள்ளே செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார். பின்னர் மற்றொரு வாசல் வழியாகக் கார் மூலம் அவர் வெளியேறினார்.

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கிற்கு எதிராகப் பாரிய ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவரைப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்ய வைத்ததில் தஹ்ரிர் சதுக்கம் பெயர் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.


# நம்பிக்கைத் துரோகத்திற்குப் பாடம் புகட்ட ம.தி.மு.க. தேர்தலை சந்திக்க வேண்டும்!

## திருமாவளவன் அழைப்பு



(சென்னை)

**தொண்டர்களின் உணர்வுகளை மதித்து, நம்பிக்கைத் துரோகத்திற்குப் பாடம் புகட்டும் வகையில் ம.தி.மு.க. தேர்தலை சந்திக்க வேண்டுமென்பதே விடுதலைச் சிறுத்தைகளின் விருப்பமாகுமென அந்தக் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.**



இது தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. விலகுவதாகவும், தேர்தலைப் புறக்கணிக்கப்போவதாகவும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அறிவித்திருக்கிறார். இத்தகைய நெருக்கடியை எதிர்கொள்ளும் அளவுக்கு ம.தி.மு.க.வை நெட்டித்தள்ளியது அ.தி.மு.க.வின் நம்பிக்கைத்துரோகமும் நன்றி உணர்வில்லாப் பண்புமே ஆகும்.

அ.தி.மு.க.வுடன் கூட்டணிவைத்துக்கொண்ட ஒவ்வொரு கட்சியுமே இத்தகைய அவமதிப்புக்கும், நெருக்கடிக்கும் ஆளாகியுள்ளது என்பது உலகறிந்த உண்மை. கடந்த 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகளுக்கும் இத்தகைய நம்பிக்கைத் துரோகத்தை அ.தி.மு.க. செய்தது. அ.தி.மு.க.வுடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி உறவானது முற்றிலும் முரண்பாடுகள் நிறைந்த ஒரு கூடா நட்பு என்பதை ம.தி.மு.க. உணரவேண்டும்.

ஈழம் கூடாது என்பதுடன் புலிகளுக்குத் தடை விதிக்கக் காரணம் நான்தான் என்று வெளிப்படையாக அறிவிக்கும் ஜெயலலிதா, பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வந்து தண்டிக்கவேண்டும் என்று சட்டசபையிலேயே தீர்மானம் நிறைவேற்றியவர்.

தேர்தலைப் புறக்கணிக்கும் ம.தி.மு.க.வின் இந்த முடிவு வைகோவின் தன்மானத்தைப்பாதுகாக்கும் என்றாலும் கட்சியையும் தொண்டர்களையும் பாதுகாக்குமா? என்பது கேள்விக்குறியே. அ.தி.மு.க. தலைமை இப்படிப் பழிவாங்கியிருப்பது கடைசி மனிதனாலும் சகித்துக்கொள்ள இயலாததாக உள்ளது. இந்தநிலையில் ம.தி.மு.க. தொண்டர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும்? எனவே தொண்டர்களின் உணர்வுகளை மதித்து நம்பிக்கைத் துரோகத்திற்குப் பாடம் புகட்டும் வகையில் தேர்தலை ம.தி.மு.க. சந்திக்க வேண்டும் என்பதே விடுதலை சிறுத்தைகளின் விருப்பமாகும் என்று தெரிவித்துள்ளார்.

## சாதனைக்கு வாக்கு

பிரஜா ராஜ்ஜியம் கட்சித் தலைவர் நடிகர் சிரஞ்சீவி சமீபத்தில் கட்சியைக் கலைத்து விட்டு காங்கிரசில் இணைந்தார். அவருக்குத் தமிழ் பேசத் தெரியும் என்பதால் காங்கிரஸ் மேலிடம் அவரை தமிழ்நாடு, பாண்டிச் சேரியில் பிரசாரத்தில் ஈடுபடுத்த முடிவு செய்துள்ளது. இதன்படி அவர் விரை வில் இங்கு பிரசாரம் செய்ய உள்ளார்.

இதுபற்றி சிரஞ்சீவி ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு ஏழை, எளியோருக்கு பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி, செயற்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் தமிழகம், கேரளா, பாண்டிச்சேரி, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் அரசின் இந்தச் சாதனைகளைக் கூறி தமிழகத்தில் வாக்கு கேட்பேன். எதிர்க்கட்சிகள் ஸ்பெக்ட்ரம் முறைகேடு பற்றி பிரசாரம் செய்தால் எடுபடாது. மத்திய அரசு இவ்விவகாரத்தில் முறையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

மத்திய, மாநில அரசுகள் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் மக்களைச் சென்றடைந்து விட்டது. இதனால் காங்கிரஸ் கூட்டணி 5 மாநிலங்களில் நடைபெறும் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெறும் என்று கூறினார்.




# நித்தியானந்தா-ரஞ்சிதா சர்ச்சையை திரைப்படமாக்கும் தயாரிப்பாளர்கள்



(பெங்களூர்)

சாமியார் நித்தியானந்தா, நடிகை ரஞ்சிதா இருவரும் நெருக்கமாக இருக்கும் காட்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி பரபரப்பு ஏற்படுத்தின. இதில் நித்யானந்தா கைதானார். ரஞ்சிதா தலைமறைவானார். தற்போது இருவரும் அது உண்மையான படமல்ல, கிராபிக்ஸ் என்று மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நித்தியானந்தா-ரஞ்சிதா சர்ச்சையை மையமாக வைத்து கன்னடத்தில் சத்யானந்தா என்ற பெயரிலும், தெலுங்கில் ஐ.ஆர்.ஏ. என்ற பெயரிலும் படம் தயாராகி வருகிறது. கன்னடத்தில் நித்தியானந்தா வேடத்தில் ரவிசேத்தனும், தெலுங்கில் ராஜேந்திர பிரசாத்தும் நடிக்கின்றனர்.

இப்படத்துக்கு நித்தியானந்தா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். என் வாழ்க்கையை படமாக்கக் கூடாது என்று வலியுறுத்தி கன்னடத்தில் படத்தை தயாரிக்கும் மதன் பட்டேலுக்கும், ரவிசேத்தனுக்கும் சட்டத்தரணி கிருஷ்ணகுமார் பகவதி மூலம் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இதுபோல் தெலுங்கில் தயாராகும் படத்தை தடை செய்ய கோரி ஹைதராபாத் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இது குறித்து தயாரிப்பாளர் மதன் பட்டேல் கூறும்போது, சத்தியானந்தா படத்தின் படப்பிடிப்பை எக்காரணம் கொண்டும் நிறுத்த மாட்டோம். படம் முடிந்து ரிலீசாகும்போது பார்த்து அதில் ஆட்சேபனையான காட்சிகள் இருந்தால் நித்யானந்தா எதிர்க்கட்டும். படம் வருவதற்கு முன்பே இது போன்று சட்டத்தரணி நீதிமன்றக் கட்டளையை அனுப்பி தடுக்க முயல்வதை ஏற்க முடியாது என்றார்.

நித்தியானந்தாவாக நடிக்கும் ரவிசேத்தன் கூறும் போது, இந்தப் படத்தில் நடித்ததில் இருந்து எனக்கு மிரட்டல்கள் வருகின்றன. நித்தியானந்தா வேடத்தில் நடிக்க கூடாது என்று எச்சரிக்கை விடுக்கிறார்கள். நான் பயப்பட மாட்டேன் என்றார்.

இந்தப் படத்துக்கு ஆந்திரா, கர்நாடகாவில் பலத்த எதிர்பார்ப்பு உள்ளது. நித்யானந்தா ஆசிரம நடவடிக்கைகள் அனைத்தும் இப்படம் மூலம் அம்பலமாகும் என்று பேசுகின்றனர். படத்தைத் தமிழில் டப்பிங் செய்து வெளியிடவும் ஏற்பாடுகள் நடக்கிறது.

# ஜப்பானுக்கு வருகை தருமாறு நடிகர் ரஜினிக்கு அழைப்புவிடுப்பு

(சென்னை)

பூகம்பம்-சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜப்பான் நாட்டுக்கு வருகை தரும்படி நடிகர் ரஜினிகாந்துக்கு, அந்த நாட்டின் பிரதமர் அழைப்பு விடுத்திருக்கிறார். இந்தத் தகவலை ரஜினிகாந்த் வெளியிட்டார்.

ஜப்பானில் பூகம்பத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் 'இந்தோ-ஜப்பான் சேம்பர் ஒப் காமர்ஸ்' சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. கூட்டத்துக்கு அந்த அமைப்பின் தலைவர் வீரமணி தலைமை தாங்கினார்.

அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு நடிகர் ரஜினிகாந்த் பேசும் போது,

"ஜப்பானிய மக்கள் எவ்வளவு பெரிய துன்பங்கள் வந்தாலும் அதிலிருந்து மீண்டு, உடனே திரும்ப எழுந்து விடுவார்கள். கடினமாக உழைக்கிற மக்கள் அவர்கள்.

அந்த மக்களுக்கு இயற்கை தொடர்ந்து இன்னல்களைக் கொடுத்து வருகிறது. எவ்வளவு இன்னல்கள் வந்தாலும், தியானம்-பிரார்த்தனை மூலம் அவர்கள் மீண்டும் சகஜ நிலையை அடைந்து விடுவார்கள். அவர்களுக்காக இறைவனிடம் நான் பிரார்த்தனை செய்கிறேன்.

ஜப்பானிய மக்கள் மிகவும் கட்டுக்கோப்பானவர்கள். கடமை தவறாதவர்கள். அங்கு சுனாமி வந்தபோது, ஒரு புகைவண்டியில் டிக்கெட் பரிசோதகர் சோதனை செய்துகொண்டிருந்தார். அப்போது அவர், பயணிகளிடம் 'நம் நாட்டை சுனாமி தாக்கியிருக்கிறது. என்றாலும் நான் கடமையில் இருந்து தவறமாட்டேன்' என்று கூறி, தொடர்ந்து தனது கடமையை செய்திருக்கிறார்.



இன்னொரு இடத்தில் மக்கள் வரிசையாக நின்று பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். சுனாமி தாக்கியதும் அவர்கள் சிதறிப் போனார்கள். சுனாமி அடங்கியபின் மீண்டும் அவர்கள் அதே வரிசையில் நின்று பொருட்களை வாங்கியிருக்கிறார்கள். இது போன்ற கட்டுக்கோப்பும், கடமை உணர்வும்தான் ஜப்பானியர்களின் மிகச் சிறந்த குணம்.

ஜப்பானுக்கு வரும்படி என்னை, அந்த நாட்டின் பிரதமரும், சில முக்கியஸ்தர்களும் அழைத்திருக்கிறார்கள். ஜப்பானிய மக்கள் மீண்டும் சகஜ நிலையை அடைவதற்காக நான் இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்தார்.

# 2 முறை பதவி வகித்தவர்களுக்கு மீண்டும் போட்டியிட அனுமதியில்லை



தமிழகத்தில் 2 முறை எம்.எல்.ஏ.ஆக இருந்தவர்களுக்கு மீண்டும் டிக்கெட் கொடுக்க சோனியா மறுத்து விட்டார். தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் 63 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இத்தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு உள்ளது. தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தலைமையிலான 20 பேர் கொண்ட மாநில தேர்தல் குழு கடந்த 17ஆம் தேதி டிக்கெட் கேட்டவர்களின் விருப்ப மனுக்களை ஆய்வு செய்து ஒவ்வொரு தொகுதிக்கும் 3 முதல் 5 பேர் கொண்ட பரிந்துரை பட்டியலை இறுதி செய்தது.

காங்கிரஸ் மத்திய தேர்தல் குழுவில் இடம்பெற்றுள்ள வயலார் ரவி, ஆஸ்கர் பெர்னாண்டஸ், குலாம் நபி ஆசாத் ஆகியோரிடம் இந்தப் பட்டியலை தங்கபாலு வழங்கினார். நால்வரும் வேட்பாளர்களை தேர்வு செய்து பட்டியல் தயாரித்தனர். அதனை லண்டனில் இருந்து டெல்லி திரும்பிய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியிடம் வழங்கினர். பட்டியலைப் பார்த்த சோனியா கடும் அதிருப்தி அடைந்ததாக கூறப்படுகிறது.

அப்பட்டியலில் பெரும்பாலானோர் ஏற்கனவே எம்.பி., எம்.எல்.ஏ.க்களாக பதவி வகித்தவர்கள். அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்றும், புதியவர்களுக்குத்தான் வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் சோனியா கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது. வேட்பாளர் பட்டியலில் தங்கபாலு மனைவி பெயரும் இடம் பெற்று இருந்ததாகவும், அப்பட்டியலை நிராகரிக்குமாறும் கூறிவிட்டாராம். புதிய வேட்பாளர் பட்டியலுடன் தன்னை வந்து சந்திக்குமாறு தங்கபாலுவிடம் கூறியுள்ளார்.


# பண்டாரநாயக்காக்கள் செய்யாததை செய்து முடித்தனர் ராஜபக்ஷாக்கள்

## பிரதியமைச்சர் மேர்வின் சில்வா புகழாரம்

(கொழும்பு)

பண்டாரநாயக்காக்களினால் செய்ய முடியாதவற்றை ராஜபக்ஷாக்கள் சாதித்துள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். கம்பஹா மாவட்டத்தில் பண்டாரநாயக்க குடும்பத்தாரினால் சாதிக்க முடியாதவற்றை ராஜபக்ஷ குடும்பம் சாதித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

53 ஆண்டுகளின் பின்னர் வத்தளை நகரசபையை முதல் தடவையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கிரிபத்கொடவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய



போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பசில் ராஜபக்ஷவே இந்த வெற்றிக்குக் காரணம்.

நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் வெற்றி பெற்றுள்ளமையை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி தேங்காய் உடைக்கவுள்ளது.

மேலும், தேங்காய் விலையை 60 ரூபாவிலிருந்து 35 ரூபாவரை எமது கட்சி மிகவும் கஷ்டப்பட்டு குறைத்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் தொடர்ந்தும் தேங்காய்க்கு பற்றாக்குறை நிலவிவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு தேங்காய் உடைக்க வேண்டும் என்றால் தமது ஊரில் ஒரு கல்லொன்று உள்ளதாகவும், முதலில் ரணிலையும், மங்கள சமரவீரவையும் அங்கு வந்து அவர்களின் தலையினை மோதிக் கொள்ளுமாறும் அமைச்சர் மேர்வின் சில்வா கேட்டுக்கொண்டுள்ளார்.

# காணாமற்போன சுவீடன்பெண் பொலிஸ் நிலையத்தில் ஆஜர்

(கொழும்பு)

இலங்கையில் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட 28 வயதான சுவீடன் பெண் நேற்று முன்தினம் காலி பொலிஸ் நிலையத்திற்குச் சமூகமளித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேரி ஜோன்ஸன் சில்லேன் எனும் இப்பெண் காலி பொலிஸ் நிலையத்திற்கு வந்து வாக்குமூலமொன்றை அளித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

தான் கடத்தப்படவோ வேறு பிரச்சினைகளைச் சந்திக்கவோ இல்லை எனவும் இலங்கையர் ஒருவருடன் இலங்கையில் பயணம் செய்து வருவதாகவும் அப்பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

# மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

க.பொ.த(சா/த) பரீட்சை வினாத்தாள் மீள் திருத்தத்திற்கான விண்ணப்பங்களை மாணவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை தபால் பெட்டி இலக்கம் 1503 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் உறுதிப்படுத்தி அனுப்பிவைக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை க.பொ.த(சா/த)பரீட்சையில் 62வீதமான மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரத் தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றோருக்கு பயிற்சி

(கொழும்பு)

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தெரிவானோருக்கான விசேட பயிற்சி நெறியொன்றை நடாத்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக பிரதி அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட திட்டங்கள், கிராமிய அபிவிருத்தி தொடர்பான புதிய எண்ணக்கருக்கள் என்பன தொடர்பாக அவர்களுக்கு விசேடமாகப் பயிற்சியளிக்கப் படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தினதும் உறுப்பினர்கள் இந்தப் பயிற்சி நெறியில் பங்கெடுப்பதுடன், மாகாண மட்டத்தில் அதனை நடாத்த ஏற்



பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிராமிய மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிறைவான சேவைகளை மக்களுக்கு வழங்கும் வகையிலேயே இந்தப் பயிற்சித் திட்டம் அமையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அணுக்கதிர் வீச்சு தாக்கத்தை தடுக்க இறக்குமதிப் பொருட்கள் மீது சோதனை

(கொழும்பு)

அணுக்கதிர் வீச்சு தாக்கத்தை தடுப்பதற்காக ஜப்பானிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் வரும் கொள்கலன்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய இறக்குமதிப் பொருட்கள் முதலியவற்றில் கதிர் வீச்சை கண்டறிவதற்கான கருவிகள் கொழும்புத் துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் கதிரியக்கம் கொண்ட பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டால் திருப்பியனுப்பப்படும் எனவும் இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமியினால் அணுஉலைகளில் அணுக்கதிர்வீச்சு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஜப்பான் மற்றும் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளிலிருந்து வரும் சரக்குகள் யாவும் கொழும்புத் துறைமுகத்தில் கதிர் வீச்சுச் சோதனைக்கு உள்ளாக்கப்படும் என இலங்கைத் துறைமுக அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பிரச்சினையின் பாரதூர தன்மை இன்னும் எமக்குத் தெரியாது. ஆனால் ஒரு முன்னெச்சரிக்கையாக இந்நடவடிக்கையை மேற்கொள்கிறோம் என இலங்கை துறைமுக அதிகார சபையின் பாதுகாப்புப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சரத் கருணாதிலக தெரிவித்தார்.

# ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்களை மே மாதமளவில் நடத்தத் திட்டம்

(கொழும்பு)

நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் உலகக்கிண்ணப் போட்டிகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் மே மாதமளவில் ஒரே தினத்தில் நடத்துவதற்கான திட்டமுள்ளதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நீதிமன்ற உத்தரவின் காரணமாக 65 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களும் அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி 23 உள்ளூராட்சிச் சபைகளுக்கான் தேர்தல்களும் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் உலகக் கிண்ணக் கிரிக்கற் போட்டிகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுட்காலம் 6 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் எதிர்வரும் ஜூன் மாதம் 31ஆம் திகதியுடன் அச்சபைகளுக்கான ஆயுட்காலம் நிறைவடைகின்றது.

மேலும், நீதிமன்றத்தால் இடை நிறுத்தப்பட்ட சபைகளுக்கான இறுதித்தீர்ப்பு கிடைத்த பின்னர் இடைநிறுத்தப்பட்ட அனைத்து சபைகளுக்குமான தேர்தல்களை மே மாதத்தில் ஒரே தினத்தில் நடத்துவது பொருத்தமானதென தேர்தல் செயலகம் தீர்மானித்திருப்பதாக செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# வட,கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நிதிஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக மீள்குடியேற்ற அமைச்சு 250மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இப் பிரதேசங்களில் சிறிய அளவிலான கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைப்பதன் மூலம் இம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் அதே வேளை, இதன்மூலம் தமது தொழில்களை இழந்துள்ள மக்களுக்கு தொழில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமையும் எனவும் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந் நிதியின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கென 30.87 மில்லியனும், கிளிநொச்சிமாவட்டத்திற்கென 25.90 மில்லியனும், யாழ்ப்பாணத்திற்கென 20.99 மில்லியனும், திருகோணமலை மாவட்டத்திற்கென 1.97 மில்லியனும், அம்பாறை மாவட்டத்திற்கு 2.23 மில்லியனும் மற்றும் வவுனியா மாவட்டத்திற்கென 19.7 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை, இந் நிதி மூலம் அம் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மேலும் மொனராகலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அமைச்சால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஜப்பான் அணு உலை வெடிப்பு இலங்கைக்கு பாதிப்பு இல்லை

(டோக்கியோ)

ஜப்பானின் புஃகுஷிமா அணு உலைக் கசிவு காரணமாக இலங்கைக்கும் அந்த அணுக்கசிவு பரவும் என்று கூறப்படும் செய்திகளில் எந்த வித உண்மையும் இல்லை என இலங்கை அணுசக்தி ஆராய்ச்சி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அவ்வாறான கதிர்த்தாக்கங்கள் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா இல்லையா என்பது தொடர்பில் தற்சமயம் சோதனைகள் இடம் பெற்றுவருவதாக, அந்த அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் சீ.டபிள்யூ. அபேவிக்ரம தெரிவித்தார்.

இந்த நிலையில்,ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் தற் சமயம் கதிரியக்கச் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருட்களில் எவற்றை நிறுத்துவது என்பது குறித்து இந்த வாரம் தீர்மானிக்கவுள்ளதாக அணுசக்தி ஆராய்ச்சி அதிகாரசபையின் தலைவர் சீ.டபிள்யூ அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

# தூதரகம் மூடப்பட்டது

(கொழும்பு)

லிபியாவில் இடம்பெற்றுவரும் அசாதாரண சூழலை அடுத்து அங்கிருந்த இலங்கைத் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அங்குள்ள தூதுவராலயத்தின் தூதுவர் மற்றும் பணியாளர்கள் நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லிபியாவில் அமெரிக்கா தலைமையிலான நாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கையினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலினால் இத்தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கித்துள் சார்ந்த உற்பத்திப் பொருள் விற்பனை நிலையம் கொழும்பில்!

## அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா திறந்து வைப்பு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கொழும்பு பத்தரமுல்லையில் அமையப் பெற்றுள்ள கித்துள் விற்பனை நிலையத்தை திறந்து வைத்ததுடன், விற்பனை நடவடிக்கையையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் ஜனகலா மையம் பத்தரமுல்லையில் புதிதாக அமைக்கப்பட்ட விற்பனை நிலையமே நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

முன்பதாக விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு நிகழ்விடத்தைச் சென்றடைந்ததும், அங்கு தேசியக் கொடியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஏற்றி வைத்தார்.

நிலைய வளாகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க அவர்களும் கித்துள் மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

தொடர்ந்து விற்பனை நிலையத்தினை அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் ஆகியோர் நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன், அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கித்துள் சார்ந்த உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டதுடன், ஒரு தொகுதிப் பொருட்களை கொள்வனவு செய்து வியாபார நடவடிக்கையினையும் சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி வி. ஜெகராஜசிங்கம் உள்ளிட்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்கு கீழான துறைசார்ந்த உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வர்த்தக சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்தில் இயங்கி வரும் வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

வர்த்தக சங்கத்தின் முன்னாள் உபதலைவரான தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் புதிய தலைவராக க.சிறிஸ்காந்தநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆ.ரி. ஜெயசீலன் காரைநகர் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளர் வி. கண்ணன் (ரஜினி), ஹெமுனு படைதரப்பைச் சேர்ந்த லெப்ரினன் கொமாண்டர் ஹம்பிக்க, காரைநகர் கடற்படை மக்கள் தொடர்பு அதிகாரி குமாரசிங்க கிராமசேவையாளரான திருப்புகழூர் சிங்கம், திருமதி பா. நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் படகுகள் திருட்டு; யாழ்ப்பாண இளைஞர் கைது

(சென்னை)

தனுஷ்கோடி மீனவர்களின் இரண்டு படகுகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவரை தமிழ்நாடு கியூபிரிவு பொலிஸார் கைது செய்துள்ளதாக பி.ரி.ஐ. செய்திச் சேவை தெரிவித்தது.

மண்டபம் முகாம் அருகே சந்தேகமான முறையில் நடமாடிக் கொண்டிருந்த வேளையிலேயே இவர் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ரவிநாத் எனத் தெரியவந்துள்ளது.

குறித்தநபர் இந்தியாவிற்கு எப்பொழுது வந்தாரென்பது தெரியாததுடன், அவர் தன்னை அகதியாகவும் பதிவு செய்யவில்லை. இவரால் களவாடப்பட்ட இரண்டு படகுகளில் ஒன்று மண்டபப் பகுதியிலிருந்து உடைந்த நிலையிலும், மற்றையது மண்டபம் பகுதியின் நடுக்கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்ட நிலையிலும் மீட்கப்பட்டுள்ளன. மக்களுக்கு உதவிசெய்வதற்காகவே தான் இரண்டு படகுகளை யும் திருடியதாக அவர் தெரிவித்துள்ளார். இவரைக் கைது செய்த கியூ பிரிவு பொலிஸார், ஏன் இவர் தன்னை அகதியாகப் பதிவு செய்யவில்லையெனவும், என்னநோக்கத்திற்காகப் படகுகளைத் திருடியுள்ளார் என்பது தொடர்பாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலையிலிருந்து இடைவிலகல் கிழக்குமாகாணத்தில் அதிகம்

## தடுத்து நிறுத்த கல்வி அமைச்சு ஏற்பாடு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள 3,215 பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதில்லையென கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிலிருந்து தெரியவந்துள்ளது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் மூடப்பட்ட 37 பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இன்னும் 29 பாடசாலைகள் திறக்கப்பட வேண்டியுள்ளன. யுத்தம் காரணமாக பாடசாலைக்குப் போவதை நிறுத்தியிருந்த 20,996 பிள்ளைகளில் 17,751 பேர் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நீண்ட காலமாக பாடசாலையிலிருந்து விலகியிருந்த பிள்ளைகள் பெற்றோரினால் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை, தான் நடைமுறைப்படுத்துவதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல்வீர திஸாநாயக்க கூறியுள்ளார்.

# பெற்ற குழந்தைக்கே 'விஷம்' கொடுத்த தாயும், தந்தையும் கைது

## சிலாபம் பகுதியில் சம்பவம்

(சிலாபம்)

குழந்தை பிறந்து சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நிலையில் குழந்தைக்கு விஷம் கொடுக்க தகப்பனும் தாயும் முயற்சித்துள்ளனர்.

குழந்தையுடைய தந்தையின் வற்புறுத்தல் காரணமாக குழந்தைக்கு விஷம் கொடுக்க, தான் முயற்சித்ததாக குழந்தையின் தாய் தெரிவித்துள்ளார்.

குழந்தை மற்றும் தாய் ஆகியோர் பொலிஸ் பாதுகாப்புடன் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாயும் தந்தையும் திருமணம் செய்து கொள்ளாத நிலையில், தந்தையால் குழந்தைக்கு விஷம் கொடுக்க தாய் நிர்ப்பந்திக்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

## லிபியா பொது மக்களின்..

விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. லிபியாவுடன் நீண்டகால நட்புறவைக் கொண்டுள்ள இலங்கை விரைவில் அங்கு சமாதானம் ஏற்பட வேண்டுமென பெரிதும் விரும்புகின்றதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி மீனவர்கள்...

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வல்வெட்டித்துறை நகரப் பொறுப்பாளர் பொ.தெய்வேந்திரம் ஊடாக இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. நேற்று அதிகாலை 5.00 மணியளவில் வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நடராஜசுந்தரம் செந்தூரன் (வயது 24), பத்மநாதன் பத்மராஜ் (வயது 22) பரமசுந்தரம் கேசவரூபன் (வயது 22), ஆகிய மூவரும் தொழிலுக்காகச் சென்றனர். இவர்கள் மதியம் 11.00 மணிக்குக் கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மதியம் 1.00 மணியாகியும் கரை திரும்பாததால் கடலில் தேடுதல் நடாத்தப்பட்டது. ஆனாலும் அவர்களைக் காணவில்லை. பின்னர் மாலைவேளை இந்தியாவிலிருந்து இந்திய மீனவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தாம் அவர்களை சிறைப்பிடித்து வைத்துள்ளதாகத் தெரிவித்ததுடன், சிறைப் பிடிக்கப்பட்ட ஒருவரை உறவினர்களுடன் பேசவும் வைத்துள்ளனர். குறிப்பாக அவர்கள் தமிழகத்தின் கோடியாக்கரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை இந்தியக் கடற்படையினர் பிடித்து தமிழக மீனவர்களிடம் ஒப்படைத்ததாக அறியப்படுகிறது. இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான மகஜரை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வல்வெட்டித்துறை நகரப் பொறுப்பாளர் பொ.தெய்வேந்திரத்திடம் கையளித்துள்ளது.

## வடமாகாண மீனவர்...

கலந்து கொண்ட சந்திப்புகளின் போது கடல் வளத்தை பாதுகாப்பது மற்றும் மீன் வளத்தை பாதுகாப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்ட போதிலும் அத்துமீறல்கள் தொடர்வதானது வேதனை அளிக்கிறது.

மன்னாரிலிருந்து வடபகுதி கடற்பரப்பு வரையில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதுடன் எமது மீனவர்களின் வலைகளையும் தொழில்சார் உபகரணங்களையும் அறுக்கும் மற்றும் சேதமாக்கும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

முக்கியமாக உலக நாடுகள் பூராகவும் ரோலர் மீன்பிடிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை நோக்கும் போது அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தையும் உணர்ந்து கொள்ள முடியும்.

1974 மற்றும் 1976 ஆண்டுகளின் ஒப்பந்தத்தின் பிரகாரம் பாரம்பரிய கடல் எல்லைக்குள் மீன் பிடிப்பதே இன்றும் நடைமுறையில் உள்ளதென்பதுடன், 1982ஆம் ஆண்டு வடபகுதியின் மீன்பிடித் தொழில் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு 43வீதம் பங்களிப்பு கிடைக்கப்பெற்றிருந்த நிலையில், கடந்த கால போர் காரணமாக அது 7வீதமாக குறைவடைந்த நிலையில் மீண்டும் மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்பி வருகின்ற இன்றைய சூழலில் 2013ஆம் ஆண்டளவில் அதனை 50வீதமாக அதிகரிக்க வேண்டும் என்பதே தமது விருப்பமாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் மனித உரிமைகளை மீறிவருகின்றனர் என்பதுடன், எதிர்வரும் 28ஆம் 29ஆம் திகதிகளில் இந்தியாவின் புதுடில்லியில் நடைபெறவுள்ள மாநாட்டில் இரு நாட்டு மீனவர்களதும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்க்கமான முடிவெடுக்கப்படும் என்றும் யுத்த காலத்தில் மிகவும் அழிவிற்குள்ளான வடக்கு கிழக்கு பகுதிகளை எமது அமைச்சின் ஊடாக கட்டியெழுப்புவதே பிரதான நோக்கமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் நடைபெற்ற மற்றுமொரு கலந்துரையாடலில் இந்திய மற்றும் வடமாகாண மீனவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன்போது இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த அருளானந்தம் தலைமையிலான குழுவினருடன் வடமாகாண கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் பங்கெடுத்தனர்.


நேற்றைய கலந்துரையாடலில் இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகளான சுனில் ஆச்யா விஸ்வநாதன் ஆகியோருடன் வடமாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழில் துறையைச் சார்ந்த உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## லிபியா மீது...

இப் போராட்டங்களை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியதாகவும் கூறப்படுகின்றது. லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர் என்ற ரீதியிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. அதேவேளை, லிபியா மீது மேற்கத்தைய நாடு கள் மேற்கொண்டு வரும் படை நடவடிக்கைகளுக்கு மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா நேற்று முன்தினம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வேறொரு நாட்டின் மக்களின் உரிமைகளில் தலையிட வேறெவருக்கும் அதிகாரம் கிடையாது என கொழும்பில் செய்தியாளர்களிடம் குறிப்பிட்ட அவர், லிபியாவில் தலைமைத்துவ மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் அதனை அந்த நாட்டு மக்களே மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். இது குறித்து அவர் ஊடகவியலாளர் களுக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

லிபிய மக்களின் சுதந்திரத்தில் தலையிட அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஈராக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஏகாதிபத்தியத் தாக்குதல் 48 நாடுகளில் தொடர்கிறது. லெபனான், யேமன் மற்றும் சகல அரபு நாடுகள் மீதும் எதிர்காலத்தில் இந்த ஏகாதிபத்தியத் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமது நிபுணர்கள் குழுவை இலங்கைக்கு அனுப்பி போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்ய முயற்சிக்கின்றார். ஆனால் புலிகள் கடந்த காலங்களில் மேற்கொண்ட மனிதவுரிமை மீறல்கள் அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. லிபியாவுக்கு எதிரான மேற்குலக நாடுகளின் படைநடவடிக்கைகளைக் கண்டித்து மேற்கொள்ளப்படவுள்ள போராட்டங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறும் ஜும்மா தொழுகையை அடுத்து ஆரம்பித்து வைக்கப்படும் என அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.



நகர சபை, யாழ்ப்பாணம்,



# அரியாலை கிழக்கில் துரித மீள் குடியமர்வு; மக்கள் நலப்பணிகள் துரித அமுலாக்கம்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டலின் பேரில் மீள் குடியமர்த்தப்பட்ட கிழக்கு அரியாலை, நாவற்காடு, பூம்புகார் கிராமங்களின் துரித மக்கள் நலப்பணிகள் நல்லூர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் அ.ரவீந்திரதாசனின் நெறிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக நாவற்காடு கிராமத்தில் அப்பகுதி மக்களின் சமுர்த்தி செயலணிக் குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முற்பகல் உதயநிலா முன்பள்ளியில் நடைபெற்றது

இந்தநிகழ்வில், நல்லூர் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன், மாதர் சங்கத் தலைவி திருமதி எஸ்.விக்கினேஸ்வரி, ஜே/90 கிராமசேவகர் எஸ்.விஜிதாஸ், கல்வியங்காடு சமுர்த்தி சங்க முகாமையாளர் திருமதி யோகராசா ராகினி ஆகியோரும் பெருமளவு பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இவ்வாறான சமுர்த்தி செயலணிக்குத் தொடர்ந்தும் பூம்புகார், கிழக்கு அரியாலை பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

மேலும் இப்பகுதி மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இதன் ஒரு நடவடிக்கையாக கிழமையில் 03 நாட்கள் அதாவது ஒன்றைவிட்ட நாள் நல்லூர் பிரதேச சபையினரால் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் அப்பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் கிணறுகளும் துப்புரவு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், இப்பகுதி மக்களின் போக்குவரத்துச் சேவைக்கென யாழ்.மாநகரசபையினரது பேருந்து சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் சேதமடைந்து போயுள்ள பாடசாலைக் கட்டடத்தைத் திருத்தியமைக்கும் வரை தற்காலிகக் கட்டடம் ஒன்றில் பாடசாலைகளை இயக்குவதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் இப்பகுதியில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1000 வீடுகள் அமைக்கும் பணிகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அத்துடன், இப்பகுதிகளில் சேதமடைந்திருக்கும் வீதியும் திருத்தியமைக்கப்படவுள்ளதுடன், மின்சார வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் மேலும் தெரிவித்தார். (பா)

# சுதேச மருத்துவ சிகிச்சைக்கான நடமாடும் மருத்துவ முகாம்

## வடமராட்சி கிழக்கில் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் சுதேச மருத்துவ சிகிச்சைக்கான விசேட நடமாடும் சேவை ஒன்று நடைபெறவுள்ளது.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ சிகிச்சை முகாமை வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேச செயலாளர்களான என்.திருலிங்கநாதன், திரு.ஆர். வரதீஸ்வரன் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இவர்களுடன் வடமராட்சி கிழக்கு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையினர், வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் மருத்துவப் பிரிவினரும் இணைந்து இம் மருத்துவச் சேவையை நடாத்தவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான சித்த மருத்துவ வைத்தியக் கலாநிதிகளான பி.குமுதரஞ்சன், எம். சிறிகாந்தா, ஏ.சிறிதரன் ஆகியோரும், சுதேச மருத்துவத் திணைக்களத்தின் சார்பில் பொதுச் சுகாதார ஆயுர்வேத வைத்திய அதிகாரியான டி.விஜயகுமார் மற்றும் பொறுப்பு வைத்திய அதிகாரியான எஸ். சரோஜினி மற்றும் ஆயுர்வேத பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த வைத்திய அதிகாரி கே.கே. யோகநாதன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.துரைரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்சிகிச்சை முகாமில் வாதம், சுவாசம், சருமம், முறிவு, நெறிவு ஆகியவற்றுக்கான சிகிச்சையும், ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. இது போன்ற சிகிச்சை முகாம் மாதாந்தம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களின் சாட்சியப் பதிவு

# அம்பாறை மற்றும் மொனராகலைக்கு நல்லிணக்க ஆணைக்குழு விஜயம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கான அமர்வுகள் எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 25ஆம் திகதி அம்பாறை மாவட்டச் செயலகத்தில் பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யவுள்ள நல்லிணக்க ஆணைக் குழு, 26ஆம் திகதி மொனராகலை மாவட்டத்தின் புத்தள மற்றும் ஒக்கம்பிட்டிய பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு கல்முனை பிரதேச செயலகத்தில் மார்ச் 27 ஆம் திகதி பொதுமக்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யவுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயம் வெள்ள அனர்த்தம் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரணமாக பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் துறையிலும் ஓய்வூதியம்; புதிய சட்ட விதிகள் விரைவில் அமுல்

## ஜனாதிபதி நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியர் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும் இதன்மூலம் தனியார் துறையினர் மற்றும் அதிகாரசபைகள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களும் நன்மை பெறக்கூடிய வகையில் புதிய சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

தனியார் துறை, சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் அதிகார சபைகளின் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பிலான புதிய சட்டங்களை அரசாங்கம் அமுலாக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# வெலிகந்தை புனர்வாழ்வு முகாமில் முன்னாள் புலி உறுப்பினர் திடீர் மரணம்

(கொழும்பு)

வெலிகந்தையிலுள்ள புலிகளின் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்றுவந்த முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை திடீரென உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தசாமி நடேசலிங்கம் என்ற 26 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பொலநறுவை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம் மரணம் குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ஸ்டாட் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார். அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமைகளுக்கு நோர்வே அரசாங்கம் வழங்கிய உதவிகள் தொடர்பில் கண்காணிக்கும் நோக்கில் ஹில்டே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

நோர்வே புகலிடக் கோரிக்கையாளர் பேரவை மற்றும் யுனிசெப் ஆகியவற்றின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுடன் நோர்வே தூதுவர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மனிதாபிமான உதவிகள் மூலம் மக்களுக்கு நன்மை வழங்கக் கிட்டியமை மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நோர்வே அரசாங்கம் 114 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளது.

இலங்கைக்கான தூதுவராக பதவியேற்றதன் பின்னர் முதல் தடவையாக ஹில்டே கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளூர் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், மனிதாபிமான ஆர்வலர்கள் ஆகியோருடன் நோர்வே தூதுவர் சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

## அமெரிக்க விமானம் ...

அமெரிக்கா இறங்கியிருக்கிறது.

இதற்காக அமெரிக்காவின் பாதுகாப்பு செயலர் ராபர்ட் கேட்ஸ், மாஸ்கோ சென்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அனட்டோலியன் ஸ்யேர்டியூக்கோ.ஃப் ஐ சந்தித்து பேசினார்.

மேற்குலக நாடுகளின் படைகள் லிபியாவில் பொதுமக்களின் உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்காக பெரும் முயற்சிகள் எடுத்துவருவதாக அவர் அப்போது கூறினார். மேலும் அடுத்த சில நாட்களில் லிபியாவில் நடக்கும் சண்டைகள் குறையத்துவங்கும் என்று தாம் ரஷ்ய அமைச்சரிடம் கூறியதாகவும் கேட்ஸ் தெரிவித்தார்.

அதேசமயம் லிபியாவில் உடனடியாக போர்நிறுத்தம் ஏற்படுத்துவதே பொதுமக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் வழி என்று ஸ்யேர்டியூக்கோ.ஃப் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த எ.ஃப் 15 போர் ஜெட்டின் உடைந்த பாகங்களைச் சுற்றி மக்கள் கூட்டம் காணப்படுவதை தொலைக் காட்சிப் படங்கள் காண்பித்தன.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது வீழ்ந்ததாக அமெரிக்க இராணுவம் கூறுகிறது. விமானத்திலிருந்து தப்பிக் குதித்த இரண்டு விமானிகளும் மீட்கப்பட்டு விட்டனர்.

லிபியாவில் கேணல் கடாபிக்கு ஆதரவான படைகளுக்கும், கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே சண்டைகள் தொடருகின்றன.

ஷெல் தாக்குதலும், கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகளும் நகரில் இடம்பெற்றதாக மேற்கு நகரான மிஸ்ரட்டாவில் உள்ள மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஒரு இரவில் மாத்திரம் 22 பேர் இறந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய நகரான அஜ்டாபியாவைச் 'சுற்றிலும், 'ஸிண்டானிலும் மற்றும் திரிபோலிக்கு தென்மேற்கிலும் கூட தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெறுகின்றன.

## ஆஸி.செஞ்சிலுவை...

மேற்கொண்டதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச்சங்கத்தின் இரண்டு பிரதிநிதிகளும் கொழும்பு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி ஒருவரும் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை அதிகாரிகளும் இதில் அடங்குகின்றனர். குறிப்பாக இலங்கை அரசாங்கத்தினால் அமைத்துக்கொடுக்கப்படும் மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியுடையதாக 450 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இப்பகுதிக்கு விஜயம் செய்த இக்குழுவினர் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்ற வீட்டுத்திட்ட நடவடிக்கைகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார். (பா)

## பசுபிக்..

ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர், சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் சீரான சூழல் தொடர்பில் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பமாக இதனைக் கருதுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**08) பின்வரும் ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. திடீரென ஏற்பட்ட தீயை அணைக்க என்ன செய்ய வேண்டும்?
   1. நீரை ஊற்ற வேண்டும்
   2. சாக்குகள் போட்டு மூடவேண்டும்.
   3. தீ ஏற்பட்டதற்கான காரணத்தை இனங்கண்டு அதை அகற்ற வேண்டும்.

02. நீருக்கு குளோரீன் கலக்கக் காரணம்.
   1. அதன் சுவையை அதிகரிப்பதற்காக
   2. நீரைச் சுத்தப்படுத்துவதற்காக
   3. நீரின் பாரத்தை அதிகரிப்பதற்காக


03. மேலே எறியப்படும் பொருள் ஒன்று கீழே விழக்காரணம்.
   1. பொருளின் பாரத்தினால்
   2. புவியீர்ப்பினால்
   3. வேறு இடமில்லாததால்

**09) பின்வரும் பந்தியை வாசித்து அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

நான் அரசனானதில் பயம் ஒன்றுமில்லைப் போலிருக்கிறது. எனக்கு <u>வேண்டிய</u> உணவு உண்பதற்கும் வழியில்லை. அதையும் <u>திருட்டுத்</u> தனமாகத்தான் செய்ய வேண்டியுள்ளது. அமைச்சர்கள் <u>பார்த்துக்</u> கொண்டே இருக்கின்றனர். அவர்களுக்கும் வேறு வேலையில்லை.

1. வேண்டிய :...................................................... (சுவையான, திருடிய)
2. திருட்டு :...................................................... (விரும்பியவாறு, களவாக)
3. பார்த்து :...................................................... (தேடிப்பார்த்தல், ஒட்டுப்பார்த்தல்)

**10) இப்படத்தைப் பார்த்து கருத்துள்ள 6 வசனங்கள் எழுதுக.**



01. ..............................................................................................
..............................................................................................
02. ..............................................................................................
..............................................................................................
03. ..............................................................................................
..............................................................................................
04. ..............................................................................................
..............................................................................................
05. ..............................................................................................
..............................................................................................
06. ..............................................................................................
..............................................................................................

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.



**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011**

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 06



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) இப்பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி நாட்டைவிட்டுச் சென்ற சலீம் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிதான் நாடு திரும்பினான். இக்காலப் பகுதியில் தனது கிராமத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களைக் கண்ட அவன் வியப்பில் ஆழ்ந்தான். கிராமத்தில் வீதிகள் திருத்தப்பட்டு அகலமாக் கப்பட்டிருந்தன. சகல வீதிகளும் மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அழகான பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. சிறிய கடைகள் திருத்தப்பட்டு பல மாடிக்கட்டடங்களாக மாறியிருந்தன. மொத்தத்தில் அவனது சிறிய கிராமம் ஒரு சிறிய நகரமாக மாறியிருந்ததைக் கண்ட அவன் மிகவும் மகிழ்ச்சியுற்றான்.

01. சலீம் எவ்வளவு காலத்திற்குப் பின் நாடு திரும்பினான்?
..........................வருடம..........................மாதம..........................நாள..........................
02. கிராமத்தில் அவன் கண்ட மாற்றம் ஒன்றை எழுதுக.
..............................................................................................
03. ஒரு வருடத்தின் நாலாவது மாதத்தின் பெயரை எழுதுக.
..............................................................................................
04 வருடமொன்றின் எத்தனை மாதங்களில் 30 நாட்கள் இருக்கின்றன?
..............................................................................................
05. வீதி என்ற சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய இன்னுமொரு சொல்லை எழுதுக.
..............................................................................................
06. அன்று என்பதற்கு எதிர்கருத்து என்ன?
..............................................................................................
07. ஜனவரி என்னும் மாதத்தின் தமிழ்ப் பெயர் என்ன?
..............................................................................................
08. பொருத்தப்பட்டிருந்தன என்பது என்ன காலம்?
..............................................................................................
09. 2005, 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் எவ்வாண்டு நெட்டாண்டாகும்?
..............................................................................................
10. படி என்பதை வினையாகவும், பெயராகவும் வருமாறு ஒவ்வொரு வசனங்கள் எழுதுக.
   1. பெயராக
   2. வினையாக
11. சலீம் எத்தனை முறை, எமது நாட்டின் சுதந்திர நாள் கொண்டாட்டங்களின்போது நாட்டில் இருக்கவில்லை?
..............................................................................................
12. எமது நாட்டுக்கு எப்போது சுதந்திரம் கிடைத்தது?
..............................................................................................
13.  இதன் பெயர் என்ன?..............................................................................................
14. இதன் எப்பகுதியினால் ஒலி உண்டாகின்றது?..............................................................................................
15. பின்வருவனவற்றிக்கு ஒத்த சொல் தருக.
   1. ஆண்டு
   2. வியப்பு


**02, 03) பின்வருவனவற்றின் தமிழ்க் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01. Good night :........................................................ 01. ஸ்தூதி :..............................................................
02. Happy birthday :................................................ 02. நகிடின்ன :..............................................................
03. Silence please :.................................................. 03. தென்ன :..............................................................
04. I am sorry :........................................................ 04. பனிட்டுவ :..............................................................
05. Hands down :.................................................... 05. மகே :..............................................................

**04) பின்வரும் ஒவ்வொன்றினதும் பெயர்களை தரப்பட்டுள்ள பெயர்களில் இருந்து தெரிந்தெடுத்து அவற்றின் கீழ் எழுதுக.**

(மா, அகத்தி, பலா, இஞ்சி, கத்தரி, புளித்தோடை)

1) 2) 3) 4) 5)



**05) பின்வரும் ஒவ்வொன்றினதும் பெயர்களைத் தரப்பட்டுள்ள பெயர்களில் இருந்து தெரிந்தெடுத்து அவற்றின் கீழ் எழுதுக.**

(தவளை, எலி, பல்லி, வாத்து, எருது, அணில், ஆந்தை)



**06) பின்வரும் ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. தன்வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே பலன்தரும் தாவரம்
1. கமுகு 2. வாழை 3. கத்தரி

02. நீரினால் பரவும் தாவரம்
1. வேம்பு 2. மா 3. தென்னை


03. உமது வகுப்பில் ஒரு மாணவர் திடீரென மயங்கி விழுந்தால்
1. அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வேன்
2. அவருக்கு உடனடியாக தேநீர் கொடுப்பேன்
3. நல்ல காற்றோட்டமான இடத்தில் படுக்க வைப்பேன்

04. நுளம்புகள் பரவுவதைத் தடுக்க.
1. நுளம்புத் திரிகளைப் பற்ற வைத்தல் 2. நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல்
3. நீர் தேங்கியிருக்கும் இடங்களில் உள்ள நீரை அகற்றுதல்





05. ஒரே அளவான இரண்டு பனிக்கட்டிகளை ஒன்றின் மீது ஒன்றை வைத்தால் அவதானிக்க முடியாதது.
1. இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்ளுதல்
2. இரண்டும் மெதமெதுவாக உருகும்
3. அவற்றின் வெப்பநிலை சிறிது சிறிதாகக் குறையும்

06. 
இவ்வுபகரணத்தின் பயன்பாடு
1. கழற்றுதல் 2. துளையிடல் 3. அடித்தல்

07. இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வழங்கும் சான்றிதழ்
1. C F L 2. S L S 3. L E B

08. மாமரம் தொடர்பான கூற்று
1. பரந்து வளரும் 2. கனிகொடாது 3. நார்வேருடையது

09. கடலாமை தன் முட்டைகளை
1. தரையிலிடும் 2. கடலிலிடும் 3. கடற்கரையிலிடும்

10. சுத்தியலால் ஆணி அடிக்கும்போது சுத்தியலைப் பிடிக்க வேண்டிய சரியான முறை




1) 2) 3)

**07) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. 205 பிள்ளைகள் சுற்றுலா ஒன்றுக்கு ஆயத்தமானார்கள். இதற்காக 5 பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் சகல பேருந்துகளிலும் சம எண்ணிக்கையான மாணவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டனர் எனில் ஒரு பேருந்தில் எத்தனை மாணவர்கள் ஏற்றப்பட்டனர்?

..............................................................................................................................




02. மூன்று பொருட்களின் விற்பனை தொடர்பான வரைபுகள் மூன்று மேலே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் ஒரே அளவில் விற்கப்பட்ட பொருள் எது?

..............................................................................................................................

03. 5 ரூபா நாணயங்கள் 5 உம், 2 ரூபா நாணயங்கள் 5 உம், 10 ரூபா நாணயங்கள் 5 உம், 50 சத நாணயங்கள் 5 உம் சேர்ந்தால் மொத்தத் தொகை யாது?

..............................................................................................................................


04. 927 ரூபாவை மூன்று பேருக்குச் சமமாகப் பங்கிடும்போது ஒருவர் பெறும் பணம்?..............................................

05. பெரிய பாத்திரம் ஒன்றை நிரப்ப 2.5 லீற்றர் கொள்ளவுள்ள சிறிய பாத்திம் ஒன்றினால் நான்கு முறை ஊற்ற வேண்டுமானால் பெரிய பாத்திரத்தின் கொள்ளளவு யாது?

..............................................................................................................................

06. வடதிசையாக பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று வலப்பக்கமாக 90 பாகை திரும்பிச் சென்று கொண்டிருக்குமாயின் அது தற்போது எத்திசையை நோக்கிப் போகிறது?

..............................................................................................................................

07. 
படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரே அளவுள்ள சில கனவுருக்கள் ஒன்றின் மீது ஒன்று வைக்கப்பட்டுள்ளன.
1. இதில் கனவுருவொன்றின் நீளம் 30 செ.மீ எனில் இவ்வமைப்பின் மொத்த உயரம் யாது?
..............................................................
2. அப்படி வைத்தபின் அடியின் நீளம் யாது?
..............................................................